விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 27 ஞாயிற்றுக்கிழமை (11.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 204

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

RAMCO

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் உதவி தேவை

## அமைச்சர் டியூ.குணசேகர யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதில் இந்தியாவின் உதவியும் ஆலோசனையும் தேவை. இவ்வாறு அமைச்சர் டியூ. குணசேகர கூறியுள்ளார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான அமைச்சர் டியூ.குணசேகர நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்த கூட்டத்திலும் தெல்லிப்பழை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்திலும் இடம்பெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு வருடப் புனர்வாழ்வுக்குப் பின்னர் பல்கலை மாணவர்கள் 7 பேர் விடுவிப்பு

### தெல்லிப்பழையில் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 7 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்து ஒரு வருடம் புனர்வாழ்வளிக்கப்பட்ட 4 ஆண்களும் 3 பெண்களும் இதில் அடங்குவர்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ.குணசேகரவால் யாழ்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த-ரணில் நேற்றுச் சந்திப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று முற்பகல் சந்திப்பொன்று இடம்பெற்றதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இதன்போது பேசப்பட்டதாகவும் உத்தேச அரசியல் யாப்புத் திருத்தம் குறித்து எதிர்வரும் காலங்களில் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்துவதாகவும் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்துள்ளார். (ந-5)

## வேலணை வைத்தியசாலையில் பயங்கரம்

## குடும்பநல பெண் உத்தியோகத்தர் விடுதியில் சடலமாக நேற்று மீட்பு

(வேலணை)

வேலணை அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றிய குடும்ப நலப் பெண் உத்தியோகத்தர் ஒருவர் கயிற்றில் தூக்குப் போட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் வேலணை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் கைதடியைச் சொந்த இடமாகக் கொண்ட செல்வி தர்ஷிகா சரவணை (வயது-27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

குடும்ப நல உத்தியோகத்தரான தர்ஷிகா வேலணைப் பகுதியின் வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்துள்ளார்.

வேலணை அரசினர் வைத்தியசாலையின் பிரசவ

(20 ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதி நீராகாரம் கொடுக்க உண்ணாவிரதம் முற்றுப் பெற்றது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பிலான நிபுணர்கள் குழுவுக்கு எதிராக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த அமைச்சர் விமல் வீரவன்ச தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளார்.

அவரைப் பார்வையிடுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரில் வந்து, நீர் அருந்தச் செய்ததையடுத்து அவரது போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

தற்போது அமைச்சர் விமல் வீரவன்ச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு வருவதற்குச் சற்று நேரத்திற்கு முன்னர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அங்கு வந்திருந்தார்.

இதன்படி கடந்த 50 மணித்தியாலங்களாக நடைபெற்ற அமைச்சர் விமல் வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்டம் நிறைவடைந்துள்ளது. இதேவேளை உண்ணா விரதத்தைக் கைவிடுவதற்கு முன்னதாக, தான் மரணித்தால் அதற்கு ஐ.நா. செயலாளர் பான் கீ மூனே பொறுப்பென விமல் வீரவன்ச தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கல்லுண்டாயில் விபத்து பெண் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் வீதியில் முச்சக்கர வண்டியும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் வயோதிப மாது ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, நேற்றுக் காலை 7.45 மணியளவில் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பேருந்து வண்டி காரைநகர் வீதியால் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தபோது, யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குச் சென்று கொண்டிருந்த முச்சக்கர

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவுடன் ஒத்துழைப்பதற்கு இலங்கை அரசு தயாராகவுள்ளது

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)


ஐக்கிய நாடுகள் கட்டமைப்பில் தொடர்ந்தும் ஒத்துழைப்புடன் செயற்படப் போவதாகவும் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பேச்சுவார்த்தையூடாகத் தீர்த்துக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாகவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் தெளிவான உறுதியை வழங்கியுள்ளதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. காரியாலயத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படுவதாகவும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபை சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் முகமாகவே வெளிவிவகார அமைச்சு இந்தக் கருத்துக்களை

(20 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று இடம் பெற்ற புனர்வாழ்வு வழங்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கும் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மங்கல விளக்கேற்றுவதனையும் புனர் வாழ்வு அமைச்சர் டியூ.குணசேகர உரைநிகழ்த்துவதனையும் முதலிரண்டு படங்களிலும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட மாணவர்களை அமைச்சர், பெற்றோர்களிடம் கையளிப்பதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்த இரு படங்களிலும் காணலாம். (படங்கள் :- றம்சன்ராஜ்)

## திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்தியத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சட்வியல் கற்கைநெறிக்கான மீள்பதிவுகள் எதிர்வரும் 22.07.2010 அன்று காலை 8.30 மணிமுதல் மாலை 1.30 மணி வரை யாழ். பிராந்திய நிலையத்தில் நடை பெறுமென இணைப்பாளர் அறிவித் துள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் ஆங்கில சான்றிதழ் கற்கைநெறிக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிபுத் திகதி 28.07.2010 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உடனடியாக யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்று படிவத்தினை பூர்த்தி செய்து யாழ்.பிராந்திய நிலையத்திலேயே ஒப்படைக்கும்படி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

## 2வருடங்கள் அமெ. சிறையில் இருந்த ஈழத்தமிழ் இளைஞனுக்கு விடுதலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளார் என்று குற்றஞ்சாட்டி கடந்த இரு வருடங்களாக அந்நாட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஈழத்தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பாஸ்கரன் பாலசுந்தரம் (வயது 27) என்கிற இளைஞனே அந்நாட்டு நீதிமன்றம் ஒன்றின் உத்தரவை அடுத்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் 2008ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14ஆம் திகதி கடவுச் சீட்டில் மோசடி செய்து அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார்.

அமெரிக்க குடிவரவு அதிகாரிகள் இவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள், அரச படைகள் இரு தரப்பினராலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்து சித்திரவதை செய்யப்பட் -டிருக்கிறார் என்றும் இலங்கையில் அவரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையென்றும் இதனால் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் வழங்க வேண்டும் என்றும் அவர் கோரி இருக்கிறார்.

இவர் சம்பந்தப்பட்ட வழக்கை விசாரித்த கீழ்நிலை நீதிமன்றம் ஒன்று இவருக்கு அரசியல் தஞ்சம் வழங்க உத்தரவிட்டது. ஆனால் இந்த உத்தரவை ஆட்சேபித்து குடிவரவு அதிகாரிகள் மேன்முறையீடு செய்தனர்.

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்துக்கு ஆயுதங்களை விநியோகித்துள்ளார் என்றும் இதனால் இவர் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளார் என்றும் காரணம் காட்டி தொடர்ந்தும் சிறையில் அடைத்து வைத்திருந்தனர்.

அவருக்கு அரசியல் தஞ்சம் வழங்கவேண்டும் என்ற கீழ் நிலை நீதிமன்றத்தின் உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது.

இந்நிலையில் இவர் சம்பந்தப்பட்ட வழக்கை அதன்பின் விசாரித்து வந்த மேல்நிலை நீதி மன்றம் ஒன்று இளைஞனின் விடுதலைக்கான உத்தரவை நேற்று பிறப்பித்தது.

அத்துடன் இவருக்கு அரசியல் தஞ்சம் வழங்கலாமா? இல்லையா? என்று முடிபு எடுக்க அரசு தரப்புக்கு மூன்று மாதகால அவகாசமும் வழங்கியுள்ளது. (ந-5)




செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00
(C-588)

ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் UK Citizen 30 வயது, 32 வயது,35 வயது,37 வயது (விவாகரத்துப் பெற்றவர்),Canada Citizen 38 வயது, 40 வயது, France Citizen 30 வயது, U.S.A 37 வயதுமணமகன்மார் உள்ளனர்.தகுந்தமணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புக்கு :-
T.P.: No : 00447508295863
00447404120188
Fax: 00442086720673 (U.K)
(C-626)

மணமகள் தேவை

UK Citizen 29.10. 1974 இல் பிறந்தவர் ரேவதி நட்சத்திரம், சிரகபாவம்35, கம்பனி ஒன்றில் கடமையாற்றும் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர் பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு :-
T.P.: No :- 00447508295863
00447404120188
Fax: 00442086720673(U.K)
(C-626)

தவறிவிட்டது

59,மூத்தவிநாயகர் கோவில், முதலாம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர் எனும் முகவரியைச் சேர்ந்த கணேசன் மாலதி என்பவரது தேசிய அடையாள அட்டை (795733752V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0215681592 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(1838)

மணமகன் தேவை

இந்து உயர்குலம் 11.10.1991 இல் பிறந்தவர். அனுஷ நட்சத்திரம் 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு ஐரோப்பிய நாட்டில் மணமகனை எதிர் பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு :-
T.P.: No :- 00447508295863
00447404120188
Fax: 00442086720673(U.K)
(C-626)

காணி விற்பனைக்கு

சாஸ்திரியார் வீதியில் வீடும் கிணறும் அடங்கிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு
T.P. No. : 0789130329
(1835)

முந்துங்கள்... முந்துங்கள் ...

கொக்ககோலா வாடிக்கையாளர்களே முந்துங்கள் உங்களிடம் உள்ள இலவச சோடா மூடிகளை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக கொக்ககோலா விநியோகஸ்தர்களான சிவா பிறதர்ஸிடம் (Siva Brothers) கொடுத்து அதற்குரிய இலவச சோடாக்களை பெற்றுக் கொள்ளவும். அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்
விநியோகஸ்தர்கள் : சிவா பிறதர்ஸ்
205, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5497
(1836)

Service & Repairing
On Call Service
Contact Us
0212229644

PCST PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
Tel :- 021 222 1101
M.M.V Road,Nelliyadi
Tel :- 021 2264999

Available
Multi HighSpeed
Dongle

SAVE MONEY!!!

Great & low Price Package
3 Year's Warranty
Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
15' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
ONLY Rs47500/=

SAVE MONEY!!!

Great Package Deal Low Price
3 Year's Warranty
Intel Dual Core 2.7Ghz
Intel Mother Board
320GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD LG Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
ONLY Rs53500/=

SAVE MONEY!!!

Ultimate Media & Gaming Package
3 Year's Warranty
Intel Core 2 Duo 2.93Ghz
Intel Mother Board
500GB Harddisk
Kington 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Samsung Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker
ONLY Rs66500/=

SAVE MONEY!!!

Computer Problems? Have Virus? Or Computer Just Running Slow? Spyware Trouble?

Any Computer Repair
Contact Us Pc Solutions

A+Service Departmet Open 6 Days A Week
Virus & Spyware Removavle Upgrades
Repairs Cleanining & Service
Maintenance , Networking

Unbelievable Prices

Web cameras
Dongles
Pendrives
Headphones
Ribbons
Woofers
TV Cards
Printers
LCD Monitors
Mother Boards
Memories
Harddisks
DVD Writers
Casings

Visit our Showrooms at Jaffna & Nelliady, Branch

3.5 Mbps High Speed Dialog Broadband
Only Rs 690/= Per Month

Also Dialog Broadband Available

| Package | Month Rent |
|---|---|
| 2GB | Rs690/= |
| 4GB | Rs499/= |
| 7GB | Rs1490/= |
| 15GB | Rs2990/= |

Contact Us Pc Solutions
(A-626)

# சகல பாடசாலைகளுக்குமான தொகை மதிப்பீட்டு கணக்கெடுப்பு

(அல்வாய்)

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளுக்குமான , பாடசாலை தொகை மதிப்பீட்டு கணக்கெடுப்பு Census தொடர்பான கூட்டங்கள் கல்வி அமைச்சின் புள்ளி விபரத் திணைக்களத்தினால் ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்தப்படவுள்ளது.

இம்முறை வவுனியா , மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான கணக்கெடுப்பு தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் 28 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வவுனியா கல்வி வலய கல்வித் திணைக்கள முகாமைத்துவ மண்டபவத்திலும்; யாழ். மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களுக்குமான பாடசாலை தொகை மதிப்பீட்டு அறிவுறுத்தல் கூட்டம் 30 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறுமென வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (6-19)

# நெருப்புக் காய்ச்சல் நோய்க்கு எதிரான தடை மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் நெருப்புக் காய்ச்சல் நோய்க்கு (தைபோயிட்) எதிரான தடை மருந்து வழங்கப்படவுள்ளது.

இம்மருந்தானது உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தேநீர்க் கடைகள் , பேக்கரி மற்றும் விடுதிகள் ஆகிய நிறுவனங்களில் உணவு தயாரிப்பாளர்கள் , கையாளுபவர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நபர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் மேற்படி நபர்களை வேலைக்கு வைத்துள்ள நிறுவனங்கள் இதற்கான தங்கள் பகுதி பொதுசுகாதார பரிசோதகருடன் அல்லது உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பினை மேற்கொள்ளுமாறு உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயகுமரன் அறிவித்துள்ளார். (6)

# வாரம் ஒரு தகவல்

## ஆடும் புலியும்

"கூண்டில் அடைத்திருக்கும் அந்தப் புலியைக் கூர்ந்து கவனிக்கிறீர்களே... என்ன விடயம்?"

"நீங்க தான் இந்தப் புலியைக் கவனிப்பவரா?"

"ஆமாம்"

"எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம்"

"கேளுங்க"

"மிருகங்களுக்குச் சிரிக்கத் தெரியுமா?"

"தெரியுமே"

"அப்படியா சொல்றீங்க?"

"ஆமாம்.மனிதக் குரங்குகள் சந்தோஷத்தை முகபாவத்திலேயே காட்டும்.இது மாதிரி ஒவ்வொரு மிருகமும் ஒவ்வொரு விதத்தில் சந்தோஷத்தை வெளிப்படுத்தும்.நாய் வாலை ஆட்டுவது கூட ஒரு வகையான புன்னகை தான்.அது துள்ளிக் குதிப்பது நாம் குலுங்கிச் சிரிக்கிறது மாதிரி!"

"சிரிப்பதென்றால் நம்மைப் போன்று சத்தம் போட்டுச் சிரிப்பதில்லையா?"

"அப்படியில்லை.சிரிப்பென்றால் உதட்டிலும் வாயிலும் ஏற்படும் மாற்றங்களை வைத்தும் போடும் சத்தங்களை வைத்தும் தான் அதைச் சிரிப்பென்று சொல்கிறோம். மிருகங்கள் அப்படியில்லை. எல்லா மிருகங்களும் ஏதோ ஒரு வகையில் சிரிக்கும்."

"சேர்! எனக்கு இன்னொரு சந்தேகம்!"

"கேளுங்கள்"

"இங்கே... இந்த மிருகக் காட்சிச்சாலை முழுவதும் நான் சுற்றி வந்துவிட்டேன். இங்கே தான் இந்த அதிசயத்தைப் பார்க்கிறேன்."

"என்ன அதிசயம்?"

"இந்தப் புலிக் கூண்டுக்குள் ஓர் ஆட்டுக்குட்டியும் இருக்கிறதே.... இது இரண்டும் சேர்ந்திருக்க முடியும் என்பதை ஒரு பெரிய விடயமாச்சே. மனிதர்களுக்கு ஒற்றுமையைப் போதிப்பதற்காக இப்படிச் பண்ணியிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். ரொம்ப நல்லகாரியம். அதுசரி, இது எப்படி உங்களுக்கு சாத்தியமாயிற்று? இதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

"வேறொன்றுமில்லை தினமும் புதுசா ஒரு ஆட்டுக் குட்டியைக் கொண்டுவந்து உள்ளே போட்டுவிடுவோம். அவ்வளவுதான்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மாகாண மட்டமெய்வன்மை போட்டியில் இரண்டாமிடம்



(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு நடைபெற்ற மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டியில் 21 வயதுப் பிரிவின் கீழ் ஈட்டியெறிதல் நிகழ்வில் யா/ அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய மாணவன் செல்வன் திருச்செல்வம் கஜேந்திரன் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இம்மாணவன் இரண்டாவது தடவையாக மாகாண மட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யூனியன் வங்கியின் அனுசரணையுடன் இலங்கை பொறியியலாளர் சங்க வட பிராந்தியமும், யாழ் முகாமையாளர் சம்மேளனமும் இணைந்து நடத்தும் "யாழ் குடாநாட்டின் திண்மக் கழிவு முகாமைத்துவமும் அதனை பயன் தரும் கைத்தொழில் முயற்சியாக்கும் எண்ணக் கருத்தும்" பற்றிய கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணிவரை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பொறியியலாளர் டுலீப் குணவர்த்தன கருத்துரை வழங்கவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ். முகாமையாளர் சம்மேளனம் கேட்டுக்கொண்டுள்ளது. (6)

# மஹோற்சவம்

(கல்வயல்)

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை ஆடிப்பிறப்பு தினத்தன்று பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்வசத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறமும் , 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4-31)

# கிளிநொச்சியில் எச்.என்.பி.வங்கிக் கிளை

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் 191ஆவது வாடிக்கையாளர் சேவை நிலையம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கருணா நிலையம்,ஏ-9 வீதி,கிளிநொச்சி என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வாடிக்கையாளர் சேவை நிலையத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் சிறந்த வங்கிக்சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என மேற்படி வங்கியினர் தெரிவித்துள்ளனர். (6)

# இராசி பலன்

11.07.2010
(ஆனி 27, ஞாயிற்றுக்கிழமை)
அமாவாசை பின்னிரவு 1.45 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 4.58 மணிவரை
இராகுகாலம் 4.27-5.59 மணிவரை
சுபநேரம் 8.59-10.29 மணிவரை அல்வாய் வேலிலந்தை முத்துமாரி கொடி, அமாவாசை விரதம்.

| | |
|---|---|
| மேடம் | நினைத்த காரியம் கைகூடும், சகோதரர் வழி நன்மை, பொருள் சேர்க்கை, பிரயாண சுகம். |
| இடபம் | கோபப்படுதல், அதிகசெலவு, காரியதாமதம், குடும்பக் கவலை. |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, உறவினர் வருகை, தெய்வ அனுகூலம், புதிய முயற்சி. |
| கடகம் | நண்பர்கள் உதவி, திடீர் பயணம், முயற்சி தாமதம், சுப செலவு. |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பணவருவாய், போசனசுகம், மன மகிழ்ச்சி. |
| கன்னி | சுபநிகழ்வு, கடினமுயற்சி, பிறர் உதவி, தெய்வசிந்தை. |
| துலாம் | சரீரப் பிரயாசை, அச்சமான நிலை, இடமாற்றம், எதிர்பாராத செலவு. |
| விருச்சிகம் | போசனசுகம், அமைதிக் குறைவு, முயற்சி தாமதம் , பணவிரயம். |
| தனுசு | அபூர்வசந்திப்பு, பணவருவாய், திடீர் பயணம், காரிய நன்மை. |
| மகரம் | ஜனவசியம், ஆரோக்கியமான நிலை, பணவருவாய், திடீர் பயணம். |
| கும்பம் | மனச்சஞ்சலம், காரிய இடையூறு, கௌரவக்குறைவு, போசன சுகம். |
| மீனம் | வீண்பயம், சுபகாரியச் செலவு, நண்பர்கள் சந்திப்பு, தெய்வசிந்தை. |

வளவன்


# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 120 |
| தக்காளி | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 |
| கோவா | 70 | 80 |
| கரட் | 120 | 140 |
| பூசனி | 40 | 40 |
| புடோல் | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 |
| பாகற்காய் | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 |
| பயற்றங்காய் | 90 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 100 |
| கறிமிளகாய் | 120 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 150 |
| போஞ்சி | 90 | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 20 |

# இலங்கையில் ரவுடியிஸம்... அதிர்ந்தது ஐ.நா.சபை!

நியூயோர்க்கிலிருந்து
பிரகாஷ் எம்.ஸ்வாமி

ஐ.நா. சபை பொதுச்செயலாளர் பான் கீ மூன்,இலங்கை அதிபர் ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளராக அறியப்பட்டவர். ஈழப்போர் உக்கிரமான சூழலிலும் இலங்கை அரசுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காதவர் அவர். இதற்கெல்லாம் பரிசாக,சிங்கள மந்திரி ஒருத்தர் ஐ.நா. செயலருக்கு



பான் கீ மூன்



பான் கீ மூன் உருவ பொம்மை தீவைப்பு...

கொடுத்திருக்கும் பட்டம் -'பிம்ப்'! கொச்சையாகச் செல்வதானால் 'கூட்டிக்கொடுக்கும் புரோக்கர்'!

பான்கீமூனின் உருவப் பொம்மையைச் செருப்பால் அடித்து,அதைச் தீயிட்டுக் கொளுத்தி...தங்கள் சுய ரூபத்தைக் காட்டி இருக்கிறார்கள். இலங்கையை ஆள்வோர்.

இத்தனையும் எதற்கு? சமீபத்தில்




ஐ.நா.வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்...

பான் கீ மூன் இலங்கையின் போர்க்குற்றங்களைப் புலப்படுத்துவதில் காட்டும் தீவிரத்துக்கு எதிர்ப்பாகத்தான்! இலங்கைக்கு எதிராக சர்வதேச அளவில் ஐ.நா. தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகம் உள்ள அணிசேரா நாடுகள் குழு ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நிற்கும் விநோத நிலைமை இப்போது! சுமார் 120 நாடுகளை உறுப்பினர்களாகக்கொண்ட நொன் -அலைன்டு மூவ்மென்ட் (Nam) எனும் அணி சேரா நாடுகள் , 'இலங்கைக்கு அரசு மீது விசாரணை கமிஷன் அமைக்கக்கூடாது' என்று போர்க்கொடி பிடிக்கின்றன. நியூயோர்க்கில் சில நாட்களுக்கு முன்பு கூடிய இந்த நாடுகளின் தூதர்கள் கூட்டத்தில் 'ஐ.நா. பொதுச் செயலாளரின் இந்த தன்னிச்சையான முடிபு ஐ.நா. பாதுகாப்பு சபை, ஐ.நா. மனித உரிமைகள் கமிஷன் மற்றும் ஐ.நா. பொதுச்சபைகளின் ஒப்புதல் பெறாமல் எடுக்கப்பட்டது' என்று குற்றச்சாட்டு சொல்லப்பட்டது.

கடந்த ஆண்டே ராஜபக்ஷ அரசின் மனித உரிமை மீறல்கள் ஐ.நா.சபையின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. 'ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் போன்ற பல்வேறு சர்வதேச அமைப்புகள் ஆதாரங்களை கொடுத்தும் ஐ.நா. சபை மௌனம் காத்தது. 'இது உள்நாட்டுப்போர்; தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தம்' என்று கட்டியம் சொன்னது. இதற்கு அமெரிக்காவின் மறைமுக ஆதரவும் இருந்தது. இலங்கைக்கு சென்ற ஐ.நா சபை துணைச்செயலர் இந்தியாவை சேர்ந்த விஜய் நம்பியார் அங்கு அவமதிக்கப் பட்டும் கூட பான்கீ மூன் மௌனம் சாதித்தார். ஐ.நா-வின் இந்த அக்கறையற்ற போக்கைப் பயன்படுத்திக்கொண்டு போரில் முன்னிலும் வேகமாக வெறியாட்டம் போட்டது இலங்கை.



நவநீதம் பிள்ளை

இப்போது அமெரிக்காவின் நிலைப்பாடு மாறிவிட்டது. அதனால்தான் இலங்கையை ஒருகை பார்த்துவிட ஐ.நா-வும் தீவிரமானது. அவசர வேகத்தில் ராஜபக்ஷவுக்கு எதிரான குற்றச் சாட்டுகளைக் கையில் எடுத்தது. ஐ.நா. சபையின் மனித உரிமைகள் மீறல் கமிஷன் தலைவராக இருக்கும் தென் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த தமிழ்ப் பெண்மணியான நவநீதம் பிள்ளை இதுநாள்வரை இலங்கைக்கு எதிராகக் கூறிவந்த குற்றச்சாட்டுகளைக் கண்டுகொள்ளாத பான் கீ மூன் தற்போது அவற்றை அலசி ஆராயத் தொடங்கியுள்ளார். பின்னணியில் இயங்குவது அமெரிக்காதான் என்பதைத் தாமதமாகப் புரிந்துகொண்ட இலங்கை அரசாங்கம் தனக்கு நெருக்கமான சீனாவை உசுப்பேற்றியது.

முன்பு ஒன்றுபட்ட ரஷ்யா இருந்த போது அமெரிக்காவுக்கு எதிராகத் துவக்கப்பட்ட அணி சேரா நாடுகள் அமைப்பு, இப்போது சீனாவின் கைப்பொம்மை! 1960 களில் எகிப்து அதிபர் நாசர், செக் கோஸ்லோவாக்கிய அதிபர் மார்ஷல் டிட்டோ போன்ற கம்யூனிஸ சித்தாந்தம் கொண்ட தலைவர்களோடு இந்தியாவின் ஜவஹர்லால் நேருவும் சேர்ந்து இந்த அமைப்பு உருவானது.

அந்த அமைப்பைத்தான் இப்போது சீனா ஆட்டிப் படைக்கிறது. "பான் கீ மூன் இலங்கையின் இறையாண்மைக்கு வேட்டு வைக்கிறார். 'ஜன நாயகத்தை குழிதோண்டிப் புதைத்து தீவிரவாதிகளை ஆதரிக்கிறார்! " என்று இந்த நாடுகள் சீறுவதன் பின்னணியில் இலங்கை மண்ணில் காலூன்றி வரும் சீனாவின் பங்கு கட்டாயம் இருக்கிறது. 'இலங்கை அரசே இதற்கான விசாரணை கமிஷனை அமைக்கும் போது ஐ.நா. வின் விசாரணை தேவையா' என்கிற 'அதிபுத்திசாலி' த்தனமான கேள்வியையும் இதில் சில நாடுகள் எழுப்பின.

இந்திய அரசோ தன் பங்குக்கு இலங்கையைக் காப்பாற்ற ஐ.நா. சபையில் மற்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கேட்டு வருகிறது என்பது ஜீரணிக்க முடியாத வேதனை. ஐ.நாவுக்கான இலங்கை தூதர் பலிதா ககோனா அணி சேரா நாடுகளின் தூதர்களுக்கு உற்சாகப் பார்ட்டி ஒன்று வைத்து ஆதரவு கேட்டதாகவும் த்கவல் உண்டு.

இந்த சூழ்நிலையில் தான் ஐ.நா. சபையின் முடிவை எதிர்த்து இலங்கையில் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் நடைபெற்ற போராட்டம் கலவரமாக வெடித்தது. அப்போது, ஐ.நா-வின் இலங்கை அலுவலக ஊழியர்கள் சிறை பிடிக்கப்பட்டனர். பான் கீ மூன் படம் போட்டு,தரக்குறைவான வார்த்தைகளை எழுதிய பதாகைகளைப் பிடித்தபடி முன்னேறியது கூட்டம். அவருடைய உருவ பொம்மைகளைக் கொளுத்தியும் ஐ.நா-வின் இலங்கை அலுவலகத்தினுள் புகுந்து துவம்சம் செய்தும் ரவுடியிஸம் காட்டினர்.

தலையிட வந்த பொலிஸை கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரைச் சொல்லியே அமைச்சர் விமல் அடக்கி ஓரமாக நிறுத்தி விட்டார். கிட்டத்தட்ட ஒரு தாதா போலவே அடியாட்கள் சகிதம் அமைச்சர் நடத்தும் ஆர்ப்பாட்ட அராஜகங்களைக் கண்டு ஐ.நா. ஊழியர்கள் விக்கித்துப் போய் நிற்க... நிலைமை மோசமாவதை அறிந்த இலங்கை வெளியுறவு செயலர் ரமேஷ் ஜெயசிங்கே அங்கே ஓடோடிச் சென்றார்.



'இச்செயல் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு பலவீனத்தை ஏற்படுத்தும்' என்று கெஞ்சினார். ஆனாலும் அமைச்சர் விமல் , 'ஐ.நா. சபை அலுவலகத்தை அடித்து நொறுக்குங்கள்' என்று சிங்களவர்களுக்குத் தொடர்ந்து கட்டளையிட்டுக்கொண்டே இருந்தார். (6ஆம் பக்கம் பார்க்க)

ஐ.நா.வுக்கு எதிர்ப்பு...



# ஐக்கிய நாடுகள் விசாரணை நடத்த ரஷ்யா ஆதரவளிக்க வேண்டும்

## சென்னையில் உள்ள ரஷ்யதுணை தூதரகத்தில் சீமான் மனு

(சென்னை)

இலங்கை தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக இலங்கை மீது ஐ.நா. விசாரணை நடத்த ரஷ்யா ஆதரவு தர வேண்டும் என்று சென்னையில் உள்ள ரஷ்ய துணை தூதரகத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மனுகொடுத்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், சென்னை சாந்தோமில் உள்ள ரஷ்ய துணைத் தூதரகத்திற்கு சென்று அங்குள்ள அதிகாரி ருஷ்லானை சந்தித்து மனுவொன்றை கொடுத்தார். அதருடன் , பேராசிரியர் தீரன், தமிழ் முழக்கம் சாகுல் ஹமீது , திருச்சி வேலுச்சாமி , ஆவல் கணேசன் ஆகியோர் சென்றிருந்தனர்.

அந்த மனுவில் இலங்கை வாழும் பூர்வீக குடிமக்களான தமிழர்கள் , இலங்கை இராணுவத்தால் இறுதிக் கட்டப் போரில் 50 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டதை விசாரணை செய்ய ஐ.நாவால் நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்கு ரஷ்யா ஆதரவு அளித்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்க உதவ வேண்டுமென்று தெரிவித்திருந்தது.

முன்னதாக அவர்கள், இலங்கை அரசை கண்டித்தும், ரஷ்ய அரசை கண்டித்தும் கோஷம் எழுப்பினார்கள். ரஷ்ய துணைத்தூதரக அதிகாரியிடம் மனுவை கொடுத்த பின் வெளியே வந்த சீமான் நிருபர்களிடம் கூறுகையில்,

இலங்கையில் நடைபெற்ற தமிழ் இனப் படுகொலை குறித்து விசாரணை நடத்த ஐ. நா. குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால் , விசாரணைக்கு இலங்கை மறுக்கிறது. அங்குள்ள அமைச்சரும் எதிர்த்து போராட்டம் நடத்துகிறார். விசாரணைக்கு மறுப்பதில் இருந்தே போர்க்குற்றம் நிகழ்ந்தது. நிரூபணம் மாகிறது. இந்த விடயத்தில் ஐ.நா. பின் வாங்க முடியாது. இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

இலங்கைக்கு ஆதரவாகரஷ்யாவும் செயல்படுகிறது. இலங்கை அரசின் பயங்கர வாதத்திற்கு யாரும் உடந்தையாக இரக்கக் கூடாது இந்த வேண்டு கோளை வைத்து ரஷ்ய துணை தூதரகத்தில் மனு கொடுத்துள்ளோம்.

அங்குள்ள அதிகாரிகளும் மேலிடத்திற்கு அனுப்ப ஆவன செய்வதாக கூறினார்கள். (6)



யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழைக் கோட்டக்கல்வி அதிகாரி ச.கைலாசநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட அளவெட்டி தபாலக அதிபர் த.ஞானேஸ்வரன் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் பாடசாலை அதிபர் கு.ஜெகநாதன் தலைமையுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று ஐங்கரப் பெருமான் உள் வீதி வலம் வருதல் இடம்பெறவுள்ளது. (6)


**19** வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
**July.2010 to Dec..2010**

தபால் மூலம் :

தமிழ் மொழி மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
**Mobile: 0777 140 844 / 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*
**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010**







கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்திய மரதன் மற்றும் சைக்கிளோட்டப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வையும் மரதனோட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற பெரியபுலம் மகாவித்தியாலய மாணவன் க.கிரிசாந், அதிபர் அ.ஆனந்தராஜாவுடன் காணப்படுவதையும் பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி இ.யசிந்தா நிற்பதையும் படங்களில் காணலாம்

# நிபுணர் குழுவுக்கு கனடாவின் லிபரல் கட்சி வரவேற்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச் சாட்டுக்களை விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கும் ஐ.நா. நிபுணர் குழுவுக்கு இலங்கை அரசு கட்டாயம் விசா வழங்க வேண்டும் என்று கனடாவின் எதிர்க்கட்சியான லிபரல் கட்சி கோரியுள்ளது. இந்த யுத்தக் குற்றச் சாட்டுக்களை விசாரிக்க ஐ.நா நிபுணர் குழு அமைக்கப்பட்டிருக்கின்றமையை வரவேற்று லிபரல் கட்சியின் தலைவர் மைக்கேல் இன்னேற்றியவ் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவர் இவ்வறிக்கையில் முக்கியமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு,

கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர்கள் கடந்த வருடம் இடம்பெற்று முடிந்த யுத்தத்தால் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் மனதை மேம்படுத்தக்கூடிய வகையில் ஐ.நா.நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் பாரதூரமான யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்றும் எனவே யுத்தக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகின்றது. ஐ.நா வின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் இவ்வாறு வலியுறுத்தி வருகின்றார்.

இந்நிலையில் ஐ.நா. நிபுணர்கள் நாட்டுக்கு வருவதற்கு விசா வழங்கமுடியாது என இலங்கை அரசு அறிவித்துள்ளமையும் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் ஐ.நா. நிபுணர் குழுவுக்கு எதிரான ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளும் எமக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளன.

இந்த நிபுணர்களுக்கு விசா வழங்குவதன் மூலம் ஐ.நாவினதும் சர்வதேச சமூகத்தினதும் விருப்பத்துக்கு மதிப்பளித்து இலங்கை நடக்கவேண்டும் என்று லிபரல் கட்சியின் சார்பிலும் எதிர்க்கட்சியின் சார்பிலும் கேட்டுக் கொள்கிறோம். (6)

# புனர்வாழ்வு அமைச்சினால் கிளிநொச்சியில் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு நடாத்தும் புனர்வாழ்வு நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர், பிரதி அமைச்சர், உத்தியோகத்தர்களும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரிகளும் பங்குபற்கின்றனர் எனவும் யுத்தம் காரணமாக பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தோர் மற்றும் ஆதனங்களை இழந்தோர், கைத்தொழில் நடவடிக்கைகளில் பாதிப்புற்றோர் அனைவரும் இந்த நடமாடும் சேவையில் பங்குகொண்டு தீர்வினைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (6)

# ஜனாதிபதியின் பதில் செயலாளராக கோத்தபாய நியமிக்கப்பட்டுள்ளார்

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டு, நாடு திரும்பும் வரை ஜனாதிபதியின் பதில் செயலாளராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி நியமித்துள்ளார். 2010 ஜூன் 29 ஆம்திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் இதுகுறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் கடந்த 29 ஆம் திகதி முதல் லலித் வீரதுங்க நாடு திரும்பும்வரை அமுலில் இருக்கும்.

இதனடிப்படையில் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளர் பதவியுடன் ஜனாதிபதியின் செயலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் லங்கா ஹெஸ்பிடல் நிறுவனத்தின் தலைவர் பதவிகளை வகித்து வருகிறார். (6)

# சமாதான நீதவான்கள் நியமனம்

(நல்லூர்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் இதுவரை சமாதான நீதவான்கள், பதவி வகிக்காத கீழ்வரும் பதினொரு பேர் நீதி அமைச்சினால் சமாதான நீதவான்களாக நியமிக்கப்படாமைக்கான கடிதங்கள் கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டோரின் விபரம் வருமாறு, கந்தசாமி சுந்தரவேல் (பெரிய பொக்கணை,வாதரவத்தை), கெங்காதரன் காண்டீபன் (டச்சுவீதி, கோப்பாய்), சீராளன் இராமசாமி (வட்டக்குளம், கட்டைப்பிராய்) ,

இரத்தினம் விக்னேஸ் வரராசா (இராசவீதி, அச்சுவேலி), சுந்தரம் சுப்பிரமணியம்( இராச வீதி,நீர்வேலி வடக்கு), குமாரலிங்கம் பூபாலசிங்கம் (அச்சுவேலி வடக்கு), தம்பிராசா திருநாவுக்கரசு (உரும்பிராய் கிழக்கு), நாகநாதன் சண்முகரத்தினம் (புத்தூர் வடக்கு), அப்புக்குட்டி கந்தசாமி (குதிரிப்பாய், அச்சுவேலி), பிலுப்பையா அருட்பிரகாசம்(கைத்தொழில் பேட்டைவீதி, அச்சுவேலி),கந்தையா நாகரத்தினம் (நீர்வேலி வடக்கு)

இதேவேளை இவர்களுக்கான நீதியமைச்சரால் வழங்கப்பட்ட கடிதம் இன்று ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் மத்தியஸ்த சபை அமர்வின் போது, உரியவர்களுக்கு வழங்கப்படும் என மத்தியஸ்த சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார். (6-134)


உங்களை உறைங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலை பயிற்சி

THE ART OF LIVING

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப்பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

- சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி
- ஞாபகசக்தி அதிகரிக்க
- நிகழ்காலத்தில் வாழ
- மனதை ஒரு நிலைப்படுத்த
- வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
- ஆஸ்மா, இரத்தக்கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிமுக உரை

இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபம். நேரம்: மாலை 5.15 மணிக்கு
காலம்: 12.07.2010 (திங்கட்கிழமை) பயிற்சி ஆரம்பம் : 06.07.2010 (செவ்வாய்க்கிழமை)

T.P.: 0777740593

(C-625)


# இலங்கையில் ரவுடியிஸம்....

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆட்டைக் கடித்து , மாட்டைக் கடித்த கதையாக கடைசியில் இலங்கையின் கண் மூடித்தனமான வன்முறை வெறி , தங்களையே தாக்கியது பற்றி ரிப்போர்ட்டை முழுமையாக வாங்கி ஸ்டடி செய்தபோது கலங்கியே போனாராம் பான் கீ மூன்!

இதோடு ஐ.நா.சபை கமிஷன் அமைப்பதை கைவிடக்கோரி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் விமல் அறிவித்திருப்பதை, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் இருந்து கூர்ந்து கவனித்தார் பான் கீ மூன். "யார் தடுத்தாலும் இனப் படுகொலைக்குக் காரணமானவர்களை சர்வதேச கோர்ட் முன்பு நிறுத்துவேன். இந்த மிரட்டல்களுக்கு எல்லாம் அஞ்ச மாட்டேன்..." என்று அறிவித்தார். இலங்கையில் உள்ள ஐ.நா.சபை அலுவலகத்துக்கு விடுமுறை அளித்த பான் கீ மூன், தேவைப்பட்டால் அந்த அலுவலகத்தையே பாதுகாப்பு கருதி இழுத்து மூடவும் தயாராகிவிட்டாராம்.

இலங்கையில் உள்ள ஐ.நா. தலைமை அதிகாரி நீல் பூஹ்னே, சிங்கள அரசு ஏவிவிடும் வெறியர்களால் எந்த நேரமும் கொலை செய்யப்படலாம் என்கிற தகவலும் பான் கீ மூனை எட்டி உள்ளது. இந்தத் தாண்டவத்தை உலக நாடுகள் பலவும் கண்டித்திருக்கும் நிலையில், பெயரளவில் கூட இந்தியா கண்டனம் தெரிவிக்கவில்லை!

அதுசரி... ஐ.நா-வின் சொரணையில் பாதியாவது இங்கே இருந்துவிட்டால் அப்புறம் தான் பிரச்சினையே கிடையாதே!

அமெரிக்க அரசின் போர்க்குற்றவாளிகளின் கமிஷன் தலைவர் ஸ்டீபன் ராப்பை, அமெரிக்காவில் வாழும் ஈழத்தமிழர் தலைவர்கள் சந்தித்து, 'ராஜபக்ஷவின் மனித உரிமை மீறல்களைத் தண்டிக்க வேண்டும்' என உதவி கேட்டார்கள். அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் உயர் அதிகாரியான இந்த அரசியல் நிபுணர், ராஜபக்ஷ அரசின் கொடுமைகளை அமெரிக்க அரசிடம் தக்க முறையில் ஆதாரத்துடன் கூறி வருகிறார். ஐ.நா. சபையின் மனமாற்றத்துக்கு இவரும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

ஸ்டீபன், முன்பு ஐ.நா.சபையின் போர்க்குற்றப் பிரிவின் சிறப்பு ஆலோசகராக பணியாற்றி ஆபிரிக்காவின் குவாண்டா, சியாரா லியோன் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை சட்டத்தின் முன்பு நிறுத்தினார். லைபீரியாவின் முன்னாள் அதிபர் சார்லஸ் டைலர் மீதும் ஹேய்க் நாட்டில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் தண்டனை வாங்கிக் கொடுத்தவர். பிறகு ஆபிரிக்க நாடுகளான கென்யா, காங்கோ நாடுகளில் அரங்கேறிய இனப்படுகொலைக்குக் காரணமான அரசியல்வாதிகளுக்கும் தண்டனை பெற்றுத் தந்தார்.

இப்போது இலங்கை விவகாரத்தை கையில் எடுத்துள்ள ஸ்டீபன், விரைவில் ராஜபக்ஷ சகோதரர்களைக் கூண்டில் ஏற்ற முடிவு செய்துள்ளார். ஸ்டீபனும், பான் கீ மூனும் இணைந்து இருப்பது இலங்கை அரசுக்கு மிகப்பெரிய நெருக்கடியைக் கொடுக்கக்கூடும். அதை இந்தியா மனது வைத்தாலும் தடுக்க முடியாது!.

# மீள்குடியேற்றம் என்ற பெயரில் அப்பாவி மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்

## ஐ.தே.கூ.எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

மீள் குடியேற்றம் என்ற பெயரில் இடம் பெயர்ந்த அப்பாவி மக்கள் ஏமாற்றப்பட் டுள் ளனர். இவ்விடயத்தில் மஹிந்த சிந் தனை எதிர்கால நோக்கு போலியானதாக இருக்க வேண்டும் இல்லையேல் சமர்ப்பிக் கப்பட்டுள்ள வரவு- செலவுத்திட்டம் பொய்யானதாக இருக்க வேண்டும் என்று ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பியான அஜித் பெரேரா சபையில் தெரி வித்தார். பாராளுமன்றத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் தொடர்ந்தும் உரையாற்று கையில்,

தமிழ் மக்களின் மனங்களை வென்று அவர்களையும் இந்நாட்டின் மக்கள் என ஏற் றுக்கொள்வதை இந்த அரசாங்கம் உறுதிப் படுத்த வேண்டும்.

மீள்குடியேற்ற அமைச்சு என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்த பணியாகும். எமது சகோ தார மக்கள் மீள் குடியேற்றப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியானது மிகவும் குறைவான தாகுமென்றும் யுத்தம் நிறைவடைந்ததும் 180 நாட்களுக்குள் இந்திய அரசின் உதவி யுடன் மீள் குடியேற்றத்தை நிறைவுபடுத்து வோம் என்று அரசாங்கம் கூறியது.ஆனால் இதுவரையில் அது நடைபெறவில்லை.

பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகை யில் யுத்தத்தின் பின்னர் வடக்கு -கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கான யோசனைகளை முன் வைத்தபோதும் அது ஏற்றுக்கொள்ளப் பட வில்லை.மீள்குடியேற்றம் என்ற பெயரிலும் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு என்ற திட்டத்திலும் வடக்கு மக்கள் ஏமாற்றப்பட் டுள்ளனர் இந்த அரசு வடக்கு மக்கள் தொடர் பில் பெரு மையாகப் பேசுகின்றது. ஜனாதிபதி தமிழில் உரையாற்றுகின்றார். ஆனால் அந்த மக் கள் துன்பப்படுகின்றனர். இன்னும் 25 ஆயிரம் பேரே மீள்குடியேற் றப்படவிருப்ப தாக அரசு கூறுகின்ற போதிலும் அதனையும் விட அதிகமான மக்கள் இருக்கின்றனர் என்பதே உண்மை. அந்த மக்கள் உறவினர்களை இழந் துள்ளனர். இவர்களின் பிள்ளைகள் முகாம்க ளில் உள்ளனர். இதுதான் அவர்களின் நிலைமை. அரசாங்கம் தொடர்ந்தும் பொய்க் கதைகளை கூறி வருகின்றது.

கடந்த வருடத்தில் கூறியதுபோல ஆறு மாதத்தில் மீள் குடியேற்றம் நிறைவடைந்து விடும் என்று ஆனால் இப்போது இந்த வருட இறுதிக்குள் எஞ்சியுள்ள மக்களை மீள்குடி யேற்றி விடுவோம் என்றும் கூறுகிறது.

ஒன்றில் மஹிந்த சிந்தனை போலியான தாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த வரவு- செலவுத் திட்டம் பொய்யானதாக இருக்க வேண்டும்.

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் மனங்களை வெல்வதாக இந்த வரவு- செலவுத்திட்டம் அமையவில்லை என்றார். (6)

## முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நோர்வேயில் வசித்துவரும் அரியாலை வாழ் மக்களின் அனுசரணையுடன் அரி யாலை சனசமுக முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அரியாலை சனசமூக நிலை யத் தலைவர் ம.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை புகையிரத திணைக்கள மரு தானை தலைமை பாதுகாவலர் நடராசா சாந் தராசா, சிறப்பு விருந்தினராக கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் திருமதி ஞானசேகரன் நளாயினி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-51)

## திறப்பு விழா

(கல்வயல்)

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் கல்யாண மண்டப திறப்பு விழா நாளை காலை9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (6-31)


## கொமர்ஷல் வங்கியில் அருணலு கணக்கு வைத்திருக்கும் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் சித்தியடைந்த சிறுவர்கள், ரூபா 30 இலட்சம் வரை வென்றுள்ளார்கள்.









தமது பிள்ளைச் செல்வங்களின் கல்வி முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு "பரீட்சைகளில் சித்தியடையும் சிறுவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில்" பல பெற்றோர்கள் வாக்களிக்கின்றனர். அவ்வாறு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு, பெறுமதி மிக்க சிறந்த பரிசுகளை வழங்கி கல்வியில் முன்னேற்றுவதற்கு மிகவும் பலம் வாய்ந்த உள்நாட்டு நிதி நிறுவனம் முன்வந்துள்ளது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் "குளோபல் பினான்ஸ்" மூலம் தொடர்ச்சியாக 12 வருடங்கள் "இலங்கையின் மிகச்சிறந்த வங்கி" என்ற விருதைப் பெற்ற கொமர்ஷல் வங்கியே அந்த பெரும் வாய்ப்பினை வழங்கும் நிறுவனமாகும்.

திறமையான மாணவர்களையும் தோல்வியடைந்தவர்களாக மாற்றும் லொத்தர் முறைகளில் இருந்து விலக்கி, சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களுக்கும் வெற்றிக்களிப்படைந்து மகிழ்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. அருணலு கணக்கு வைப்பாளர்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் திட்டத்தை கொமர்ஷல் வங்கி 1998 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. 2005 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 164 மாணவர்களுக்கு ரூபா 1,350,000 வும், 2006 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 170 மாணவர்களுக்கு ரூபா 1,400,000 வும், 2007 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 353 மாணவர்களுக்கு ரூபா 3,014,500 வும், 2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற 338 மாணவர்களுக்கு 2,930,471 ரூபாவும், வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலு கணக்கு வைப்பாளர்களில் 350 மாணவர்கள் கொமர்ஷல் வங்கியின் அதிகூடிய பரிசுத் தொகையாக 2,963,337 ரூபாவை இவ்வாண்டில் பெற்றுள்ளனர்.

சகல பாடசாலைகளிலும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அருணலு கணக்கு வைத்திருக்கும் மாணவர்களின் கணக்கில் ஆகக்குறைந்த தொகையாக ரூபா 5,000 கணக்கில் இருப்பின் அவர்கள் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் முறையே, முதலாமிடத்திற்கு 10,000 ரூபாவும், இரண்டாமிடத்திற்கு 7,500 ரூபாவும், மூன்றாமிடத்திற்கு 5,000 ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன், 2007 ஆம் ஆண்டு முதல் வெற்றி பெற்ற எந்தவொரு மாணவரும் தனது மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும் சந்தர்ப்பத்தில் அவரின் அருணலு கணக்கின் மிகுதி தொகையானது இரட்டிப்பாக்கப்படுவதுடன் ஆகக்கூடிய தொகையாக ரூபா. 50,000 மட்டுமே அதிகரிக்கப்படும்.

கல்வியின் முக்கியத்துவத்தை அழுத்தமாக எடுத்துக்கூறும் சமூக பொறுப்புமிக்க நிறுவனமாக உபசரணைப் பங்களிப்பைச் செய்வதையிட்டு கொமர்ஷல் வங்கி பெருமை அடைவதாகவும், கஷ்ட பிரதேசத்தில் பயிலும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களும் பயன் பெறுவதானது, பெருமை தருவதாகவும் வங்கியின் பிரதான பொது முகாமையாளர் திரு. ரவி டயஸ் குறிப்பிடுகிறார்.

கொமர்ஷல் வங்கியின் அருணலு சேமிப்புக் கணக்கானது பிள்ளைகளின் கல்வி ஆற்றலை விருத்தி செய்து, சேமிப்பு நற்பழக்கதை வழக்கப்படுத்துவதை முக்கிய நோக்காக கொண்டு 1998 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அருணலு கணக்கை நாடு முழுவதும் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகளிலும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை நிலையங்களிலும் ரூபா 100/- வைப்புச் செய்வதன் மூலம் ஆரம்பிக்க முடியும்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

COMMERCIAL BANK

# ஐ.நா. அலுவலகம் மூடப்பட்டமையானது 34 நாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்டங்கள் சம்பந்தமாக ஆசியப் பசுபிக் அலுவலகம் மூடப்பட்டமை யானது 34 நாடுகளுக்குப்பாதிப்பை ஏற்படுத்தும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிராந்திய அலுவலகத்தின் ஊடாக கலந்துரையாட முடியாது போனதால் கவலைக்குரிய நிலைமை என வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு அலுவலகத்தின் பணிகளை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதில் ஏற்பட்டுள்ள தடைகளை அகற்ற இலங்கை அதிகாரிகள் தவறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் பேச்சாளர் கடந்த 8ஆம் திகதி தெரிவித்திருந்தார். இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு ஐக்கிய நாடுகளின் அனைத்து அலுவலகங்களும் தமது பணிகளை மேற்கொள்வதற்காக தேவையான பாதுகாப்பை வழங்கியுள்ளதாகக் கூறியுள்ளது.

எதிர்காலத்தில் ஐக்கியநாடுகளின் செயற்பாடுகளுக்கு அமைய செயற்பட எண்ணியுள்ளதாகவும் அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஐக்கிய நாடுகளின் கொழும்பு அலுவலகத்தின் பணிகளை முன்னெடுத்துச்செல்வது குறித்து அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த சில தினங்களாக அத்தியாவசிய பணிகளை எந்தத் தடையும் இன்றி முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பாக ஐ.நா.வின் கொழும்பு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான சேவைகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லவேண்டிய தேவை உண்டு எனவும் அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (6)

# கொக்குவில் இந்து நடத்திய மரதன், சைக்கிளோட்டப் போட்டியில் முதலிடம் பெற்றுக்கொண்டோர்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி நடத்திய மரதன் ஓட்டப் போட்டியில் பெரியபுலம் மகா வித்தியாலய மாணவனும் சைக்கிள் ஓட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி வீராங்கனையும் முதலிடம் பெற்றனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவினையொட்டி அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்திய மரதன் மற்றும் சைக்கிளோட்டப் போட்டிகள் என்பன நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் கல்லூரி முன்றலில் நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் பெரிய புல மகாவித்தியாலய வீரன் க.கிரிசாந் முதலிடம் பெற்றார். தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஞா.வேல்முருகன் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலையைச் சேர்ந்த வி.பிரசன்னா ஆகியோர் பெற்றனர்.

பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியில் முதலிடத்தை கொக்குவில் இந்துக்கல்லூரி வீராங்கனை இ.யசிந்தாவும் இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த ப.பபிர்தா கொக்குவில் இந்தக்கல்லூரி அணியைச் சேர்ந்த ப.பவித்திரா ஆகியோர் பெற்றனர். (6)

# தொண்டைமானாற்றிலிருந்து பருத்தித்துறைக்கு அதிகாலை 3.45 மணிக்கான பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை போன்ற இடங்களிலிருந்து வவுனியா, திருகோணமலை போன்ற இடங்களுக்கு பயணம் செய்யும் பயணிகளின் நலன்கருதி கடந்த 02ஆம் திகதி முதல் அதிகாலை 3.45 மணிக்கு பேருந்து சேவையொன்று நடத்தப்படுகிறது.

இதற்கமைய அதிகாலை 3.45 மணிக்கு தொண்டமானாற்றிலிருந்து பேருந்து ஒன்று புறப்பட்டு 751 பாதை வழியாக பருத்தித்துறை பேருந்து நிலையத்தை வந்தடையும்.

அங்கிருந்து அதிகாலை 4.30 மணிக்கு பேருந்து ஒன்று புறப்பட்டு நெல்லியடி,கொடிகாமம் ஊடாக திருகோணமலைக்குச் செல்லும் பேருந்தின் இணைப்புச் சேவையைப் பெறமுடியும் எனவும் வடமராட்சி வாழ் பயணிகளின் நலன்கருதி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்து சபையின் (வடக்கு) பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (6)

# ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவுக்கு பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்பு

(கொழும்பு)

ஐ.நா. வின் நிபுணர் குழுவினை வர வேற்றும் இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவித்தும் பாட்டாளி மக்கள் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பா.ம.க. தலைமை சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் சென்னை சிவாணந்தா அரங்கில் உள்ள அண்ணா கலையரங்கில் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் இலங்கையில் கடந்தாண்டு இடம்பெற்ற யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் ஆகியவை குறித்து விசாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மூன்றுநபர்விசாரணைக்குழுவைநியமித்திருப்பதை பா.ம.க.பொதுக் குழு வரவேற்கிறது.

அதே சமயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைக்க மாட்டோம் என்று செயற்படும் இலங்கை அரசை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கையில் போர் முடிந்து ஓராண்டுக்கு மேல் முடிந்தும் தொடர்ந்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மீள் குடியமர்த்துவதற்கான காலக்கெடு முடிந்துவிட்ட நிலையிலும் இலங்கை அரசு இதில் மெத்தனம் காட்டி வருவதற்கு பொதுக்குழு கண்டனம் தெரிவிக்கிறது.

வாக்குறுதியை நிறைவேற்றும்படி இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்றும் ஈழத்தமிழர்கள் சுயாட்சி பெற்று வாழ்வதற்கு தேவையான அரசியல் தீர்வு காண விரைந்து செயல்பட வேண்டும் என்றும் இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# 11.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்

- 1346- லக்சம்பேர்க்கின் நான்காம் சார்ள்ஸ் புனித ரோமப் பேரரசன் ஆனான்.
- 1576- மார்ட்டின் புரோபிஷர் கிறீன்லாந்தைக் கண்டார்.
- 1735- புளூட்டோ சூரியனுக்குக் அண்மையாக ஒன்பதாம் இடத்தில் இருந்து எட்டாம் இடத்துக்கு இந்நாளில் வந்தாக கணித கணக்கீடுகள் தெரிவித்தன. இது பின்னர் 1979 இல் மீண்டும் நிகழ்ந்தது.
- 1740- யூதர்கள் சிறிய ரஷ்யாவில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.
- 1750- நோவா ஸ்கோசியாவின் ஹாலிஃபாக்ஸ் நகரத்தின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.
- 1776-கப்டன் ஜேம்ஸ் குக் தனது மூன்றாவது கடற்பயணத்தை ஆரம்பித்தான்.
- 1796-மிச்சிகனின் தலைநகர் டிட்ராயிட் நகரை பிரித்தானியாவிடம் இருந்து ஐக்கிய அமெரிக்கா ஜே உடன்படிக்கையின் படி பெற்றுக்கொண்டது.
- 1811-வளியின் மூலக்கூறுகள் பற்றிய தமது குறிப்புகளை இத்தாலிய அறிவியலாளர் அவகாதரோ வெளியிட்டார்.
- 1859- இரு நகரங்களின் கதை என்ற நாவலை சார்ள்ஸ் டிக்கன்ஸ் வெளியிட்டார்.
- 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்:கூட்டமைப்புப் படையினர் வோஷிங்டன் டிசியைத் தாக்க முயற்சித்தனர்.
- 1882- பிரித்தானிய மத்தியத்தரைக் கடற்படையினர் எகிப்தின், அலெக்சாண்டிரியா நகர் மீது குண்டுத்தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1893- முதன் முறையாக ஜப்பானைச் சேர்ந்த கொக்கிச்சி மிக்கிமோட்டோ செயற்கையாக முத்துக்களை வளர்க்கும் முறையொன்றை அறிமுகப்படுத்தினார்.
- 1895- லூமியேர சகோதரர்கள் அறிவியலாளர்களுக்கு திரைப்படம் ஒன்றைக் கண்டுபிடித்தனர்.
- 1897-வடமுனைக்கு வாயுக்குண்டு மூலம் செல்லுவதற்காக சாலமன் அண்டிரே நோர்வேயின் ஸ்பிட்ஸ்பேர்ஜன் தீவிலிருந்து புறப்பட்டார். ஆனாலும் வாயுக்குண்டு தரையில் மோதியதில் அவர் கொல்லப்பட்டார்.
- 1921-மங்கோலியா சீனாவிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1936-நியூயோர்க் நகரில் டிறைபரோ பாலம் திறக்கப்பட்டது.
- 1943- போலந்தில் வொல்ஹீனியா என்ற இடத்தில் நாசி ஜெர்மனியரினால் ஆயிரத்துக்கும் அதிகமான போலந்து மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1973-பிறேசில் போயிங் விமானம் பாரிசில் விபத்துக்குள்ளாகியதில் 134 பேரில் 123 பேர் கொல்லப்பட்டனர்.
- 1978-ஸ்பெயினில் எரிவாயுவை ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று தீப்பிடித்ததில் 216 உல்லாசப் பயணிகள் உயிரிழந்தனர்.
- 1979-ஸ்கைலாப் விண்வெளிநிலையம் பூமிக்குத் திரும்பியது.
- 1982-இத்தாலி மேற்கு ஜெர்மனியை 3-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து உலக காற்பந்துக் கிண்ணத்தை வென்றது.
- 1987-உலக மக்கள் தொகை 5 பில்லியனைத் தாண்டியது.
- 1990-கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது.
- 1991-ஹஜ் பயணிகளை ஏற்றிச் சென்ற டிசி-8 விமானம் சவுதி அரேபியாவில் விபத்துக்குள்ளாகியதில் 261 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995-சேர்பிய இராணுவம் பொஸ்னிய நகரான சிரெப்ரெனிக்காவைத் தாக்கியதில் 8ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 2007-பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திலுள்ள செம்மசூதிக்குள் இருக்கும் தீவிரவாதிகளை வெளியேற்றும் முகமாக இராணுவத்தினர் மசூதியின் மீது தாக்குதல் நடத்தியதில் மசூதியின் மதகுரு அப்துல் காஸி உட்பட குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007- குடும்பிமலை புலிகளின் முகாம் வீழ்ச்சியடைந்தது.

### பிறப்புக்கள்

- 1767- ஜான்குவின்சி ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 6ஆவது ஜனாதிபதி (இ.1848)
- 1920-வி.ஆர்.நெடுஞ்செழியன், தமிழக அரசியல்வாதி (இ.2000)
- 1966-பாலா, தமிழ்த் திரைப்பட இயக்குனர்

### இறப்புக்கள்

- 1974-பியார் லாஜர்க்விஸ்ட் நோபல் பரிசு பெற்றவர் (பி.1891)



**2006-மும்பை ரயில் குண்டு வெடிப்புகள் :மும்பாயில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் 200 பேர் கொல்லப்பட்டனர்.**

# வெளுத்துகட்டு

திரைவிமர்சனம்

வீட்டுக்கும் அடங்காமல், ஊருக்கும் அடங்காமல் வெட்டும் குத்துமாக திரியும் நாயகர், நாயகி சொன்ன ஒரே காரணத்திற்காக உருமாறி... ஊர் மாறி... உழைத்து முன்னேறி காதலி முன் போய் நிற்கும் கதை!

கதைப்படி, பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே உடன் படிக்கும் நாயகி அருந்ததிக்கு பொடிகார்டாக வலம் வருகிறார் நாயகர் கதிர். 5ஆம் வகுப்பில் அருந்ததியை அடித்து கண்டித்த, குற்றத்திற்காக ஆசிரியர் மண்டையை உடைத்த கதிருக்கு, அதன்பின்னர் பள்ளிக்கூடத்தில் இடமில்லை.

ஆனால் தொடர்ந்து படித்து கல்லூரி வரை போன அருந்ததியின் நெஞ்சாங்கூட்டிற்குள் பெரிய சிம்மாசனமே கதிருக்காக போடப்பட்டுள்ளது.



இவர்களது நட்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து காதலாக காய்த்து குலுங்க ஆரம்பிக்கிறது. பெரிய இடத்து பெண்ணாயிற்றே...! சும்மா இருப்பார்களா? அருவாளும் சாராயமுமாக திரியும் கதிரை யாருக்குத்தான் பிடிக்கும்?

காதலி சொன்ன காரணத்துக்காக கோயில் கட்டுகிறார்.

காதலியை பிடித்து இழுத்ததற்காக அவரது முறைமாமனின் கையை வெட்டுகிறார்.

இவ்வாறெல்லாம் செய்யும் கதிர், அதே காதலி சொன்ன காரணத்திற்காக சென்னைக்கு போகிறார். ஒரே பாடலில் என்றில்லாமல் படிப்படியாக உழைத்து முன்னேறுகிறார் பெரிய ஹோட்டல் அதிபர் ஆகிறார்.


இதற்குள் ஊரில் அருந்ததிக்கு திருமண ஏற்பாடுகள் நடக்கிறது. அருந்ததி ஆசைப்பட்ட மாதிரியே பெரிய மனிதர் ஆகும் கதிருக்கு, கதிர் ஆசைப்பட்ட மாதிரி அருந்ததி கிடைத்தாளா? இல்லையா? என்பது க்ளைமாக்ஸ்!

எம்.சுகுமாரின் ஒளிப்பதிவும், பரணியின் இசையும் வெளுத்து கட்டு படத்தை மேலும் தூக்கி காட்டுகின்றன. முன்பாதி படத்தை விட பின்பாதி விறுவிறுப்பை கூட்டுகிறது.


முன்பாதியின் பாதி "பசங்க" பட பாதிப்போ என கேட்க தூண்டுவது உள்ளிட்ட இன்னும் பல இழுவை விடயங்களை இயக்குனர் சேனாதிபதிமகன் நினைத்திருந்தால் தவிர்த்திருக்கலாம்! தயாரிப்பாளர், டைரக்டர் எஸ்.ஏ.சந்திரசேகரனாவது எடுத்து சொல்லி இருக்கலாம்!

நடிகர் விஜய்யின் அப்பா தயாரித்திருக்கும் படமென்று விஜய் ரசிகர்கள் படையெடுத்தால்...

வெளுத்துகட்டு - பொளந்து கட்டு(ம்)!



## கமலஹாசன் வலையில் சிக்கிய த்ரிஷா அம்மா!



உலக நாயகன் கமல்ஹாசன் வீசிய வலையில் த்ரிஷாவின் அம்மா உமா கிருஷ்ணன் சிக்கியிருப்பது தான் கோடம்பாக்கத்தின் லேட்டஸ்ட் கதை. நடிகைகளின் அம்மாக்களில் அழகானவர் யார்? என ஒரு போட்டி வைத்தால் முதலிடத்தில் இருப்பவர் த்ரிஷாவின் அம்மா உமாவாகத்தான். த்ரிஷாவைப் போலவே இன்னமும் இளமையான தோற்றத்துடன் மாடர்ன் மங்கையாக வலம் வந்து கொண்டிருக்கும் உமாவை சினிமாவில் நடிக்க வைக்க பலரும் முயன்று தோற்றுப் போயிருக்கிறார்கள். நடிப்பெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது என்று சட்டென பதில் சொல்லி கால்ஷீட் கேட்பவர்களை ஓட்டம் பிடிக்க வைத்து விடுவார்.ஆனால் தற்போது கமல்ஹாசன் வீசிய வலையில் விழுந்து விட்டாராம் உமா. கமல்ஹாசன் - த்ரிஷா நடிக்கும் மன்மதன் அம்பு படத்தில்தான் உமா நடிக்கப்போகிறார்.

## நான் பிள்ளையார் பிரியன்–தனுஷ்



சிவபெருமான் தனுஷுக்கு இஷ்ட தெய்வம். இதனால் இரண்டாவது ஆண் குழந்தைக்கு லிங்கா என்று பெயரிட்டுள்ளார். என்றாலும், இவரது வீட்டில் விதவிதமான பிள்ளையார் சிலைகள் இருக்கின்றன. "இஷ்ட தெய்வம் சிவன் என்றாலும் நான் பிள்ளையார் பிரியன்" என்கிறார். "அதென்னவோ தெரியல. மற்ற கடவுள்களை விட, பிள்ளையார் மீது எல்லாருக்குமே அதிக பாசம். அவரைத்தான் நம்ம விருப்பத்துக்கு ஏற்ப உருவத்தை மாற்றி வணங்கலாம். நான் எங்கே போனாலும் பிள்ளையாரை மனதில் நினைத்து கொண்டிருப்பேன்.அவுட்டோர் ஷூட்டிங் நடக்கிறப்போ, எங்காவது ரொம்ப வித்தியாசமான பிள்ளையார் சிலை கிடைச்சா, அதை வாங்கி வீட்டுக்கு கொண்டு வந்து அலங்கரிப்பேன்" என்றார்.

## கார்த்தியுடன் காதலா?; தமன்னா பரபரப்பு பேட்டி



""கார்த்தியை காதலிப்பதாக சொல்வதில் உண்மை இல்லை. எந்த நடிகரையும் நான் காதலிக்கவில்லை"" என்றார் தமன்னா."பையா" படத்தில் கார்த்தி ஜோடியாக நடித்தார் தமன்னா. இதையடுத்து இப்போது மீண்டும் கார்த்தியுடன் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார். இருவரும் காதலிப்பதாகவும் தன்னுடன் நடிக்க தமன்னா பெயரை கார்த்தி சிபாரிசு செய்வதாகவும் கோடம்பாக்கத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தமன்னா அளித்த சிறப்பு பேட்டியில்,

என்னுடன் நடிக்கும் ஹீரோக்களுடன் ஷூட்டிங் ஸ்பொட்டில் நட்பாக பழகுவேன். கார்த்தியுடனும் அப்படித்தான் பழகினேன். சூர்யாவுடன் "அயன்" படத்தில் நடித்தபோது கார்த்தியை பற்றி நிறைய சொல்வார். "என்னுடன் நடிப்பதைவிட கார்த்தியுடன் நடிக்கும்போது நேரம் போவதே உங்களுக்கு தெரியாது. காரணம், கார்த்தி கலகலப்பாக பேசக்கூடியவன்" என்பார். அவர் சொன்னது உண்மைதான் என்பதை ஷூட்டிங் ஸ்பாட்டில் தெரிந்து கொண்டேன்.ஒரு படத்தில் சேர்ந்து நடிக்கும் ஹீரோ, ஹீரோயின் நட்பாக பேசிக்கொள்வது தவறா? எங்களை பற்றி நிறைய தகவல்கள் வருகிறது. அதில் எதுவும் உண்மை இல்லை என்றார் தமன்னா.

# 2020-ம் ஆண்டளவில் இலங்கையின் ஏற்றுமதியை 20 பில்லியன் டொலராக மாற்றுவதே எமது இலக்கு

## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

2020ஆம்ஆண்டளவில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை இருபது பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிப்பதே எமது இலக்காகும். அதனை அடைவதற்கு சகலரதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என கைத்தொழில்,வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கொம்பனி வீதி நவம் மாவத்தையில் அமைந்துள்ள ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ,அமைச்சராக பதவியேற்றபின் முதற் தடவையாக சென்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் கைத்தொழில், வர்த்தக அமைச்சராக நியமிக்கப்பட்டதையிட்டு மிகவும் பெருமையடைகிறேன்.தற்போது நாட்டில் அமைதி நிலை தோன்றியுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் அதிகளவில் முதலீடு செய்வதற்கு ஆர்வத்துடன் இருக்கிறார்கள்.இதன் மூலம் இலங்கைக்கு அதிகளவான வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

இதேவேளை இலங்கை ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் சரத் டி சில்வா இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

2020 இற்குள் அல்லது அதற்கு முன்னரே இலங்கையின் ஏற்றுமதியை 20 பில்லியன் அமெரிக்க டொலராக மாற்றுதல் என்ற இலக்கை அடைவது சாத்தியமானது.

குறிப்பாக தனியார் துறையை உற்பத்தி திறனுடையதாக ஊக்குவிக்க வேண்டும்.அத்துடன் முக்கியமாக விவசாயம் ,மீன்பிடித் துறை அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வழிவகைகளை கண்டறிய வேண்டும்.

தனியார் வர்த்தக சங்ககங்கள் தமக்கிடையிலான தொடர்பாடலை , இந்திய வர்த்தக சங்கங்கள் கேரளா , ஆந்திரபிரதேசம் ,பொள்ளாச்சி , சென்னை என தொடர்பை-தொடர்பாடலை அதிகரிக்க வேண்டும். எனவும் தெரிவித்தார்.




# விநியோக ஆரம்ப தினத்திலேயே ஓடெல் பங்குகள் விற்றுத் தீர்ந்தன

ஓடெல் நிறுவனத்தின் ஆரம்பப் பங்கு விநியோகம் கடந்த 5-ம் திகதி ஆரம்பமான அதே தினத்திலேயே மிகையான கேள்வியோடு நிறைவடைந்தது.இதுகுறித்து ஆரம்ப பங்கு விநியோக பதிவாளர் கொழும்பு பங்குச் சந்தைக்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில், மொத்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த விபரங்கள் மற்றும் மிகை கேள்விச் சூழலில் பங்கு விநியோக ஒதுக்கீடுகள் குறித்தும் முறைப்படி அறிவிக்கப்படும்.

இலங்கையில் பொது பங்கு விநியோகத்தை மேற்கொண்ட முதலாவது சில்லறை விற்பனை நிறுவனம் ஓடெலாகும்.

எமது பங்குக் கொள்வனவில் மக்கள் காட்டிய ஆர்வம் மகத்தானது. அது எமக்கு ஒரு பாரிய உந்துசக்தியாகவும் அமைந்துள்ளது என்று ஓடெல் நிறுவன ஸ்தாபகரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான




ஓடாரா குணவர்த்தன தெரிவித்தார்.எமது நிறுவனத்தின் ஆரம்பம் முதல் நாம் ஒவ்வொரு காரியத்தையும் வாடிக்கையாளர் மகிழ்ச்சி கருதி செய்து வந்துள்ளோம். அதனால் எமது ஆரம்ப பங்கு விநியோகத்தில் அவர்கள் காட்டிய ஆர்வமும் எமக்கு பெருமையளிக்கிறது என்றார்.

தற்போதைய காட்சியறைகளின் விரிவாக்கம் மற்றும் முன்னேற்றம் என்பவற்றுக்கே பங்கு விநியோகம் மூலம் திரட்டப்பட்ட நிதி பயன்படுத்தப்படுமென நிறுவனம் தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 112.67 | 114.20 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 170.18 | 173.56 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 142.31 | 145.55 |
| சுவிஸ் பிராங் | 106.70 | 109.22 |
| கனேடிய டொலர் | 107.39 | 110.04 |
| அவுஸ்திரேலிய டொலர் | 98.06 | 100.63 |
| சிங்கப்பூர் டொலர் | 81.41 | 83.17 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.29 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.43 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.88 | |

# நாணயத்தாள்களை அச்சிடும் டி லா றூ 30 மில்.அமெ.டொலரில் விஸ்தரிப்பு

சர்வதேச ரீதியில் நாணயத் தாள்களை அச்சிட்டு வெளியிடும் டி லா றூ லங்கா நிறுவனம் இலங்கையில் தனது வர்த்தக நடவடிக்கையை விஸ்தரித்துள்ளது.30 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் புதிய ஆலை ஒன்றை பியகமவில் அமைத்துள்ளது.

குறித்த நிறுவனம் சிங்கப்பூரில் உள்ள தனது நாணயத் தாள்களை அச்சிடும் அமைப்பை மூடிவிட்டு, இலங்கைக்கு தனது பணிகளை நகர்த்தியுள்ளது.

கடந்த வாரம் பியகமவில் நடைபெற்ற புதிய தொழிற்சாலை ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம,

இது போன்ற நிறுவனங்களின் வருகை இலங்கையின் ஏற்றுமதி வருவாயை நிச்சயமாக அதிகரிக்கும்.

தோமஸ் டி லா றூ(Thomas De La Rue)-ன் விரிவாக்கம் இலங்கை முதலீட்டுக்கு உகந்த இடம் மற்றும் உட்கட்டமைப்பு,பயிற்றப்பட்ட மனிதவளம் உண்டு என்பதை நிரூபிப்பதாக அமைந்துள்ளது. இதன் மூலம் 150 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது என்றார்.

இதேவேளை டி லா றூ நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று



அதிகாரி ஜேம்ஸ் ஹசி பேசியதாவது, எமது நிறுவனம் இலங்கை வர்த்தகம் செய்வதற்கு பாதுகாப்பான இடம் என நம்புகிறது என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதி பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மார் குடிங்,இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் வலுவான வர்த்தக உறவு உண்டு. இங்கு 207இற்கும் மேற்பட்ட பிரித்தானிய கம்பனிகள் செயற்படுகின்றன. அவற்றின் முதலீடு அண்ணளவாக 429 மில்லியன் டொலர்கள். இந்த உறவுக்கு டி லா றூ முதலீடும் வலுச்சேர்க்கும் என்றார்.


1986இல் பிராட்பரி வில்கின்சன் அண்ட் கம்பனி 70 மில்லியன் ரூபாய் முதலீட்டில் பியகமவில்,நாணயத் தாள்களை அச்சிடும் ஆலையை ஆரம்பித்தது.இதில் 28 மில்.(40%) அரசு முதலிட்டது. பின்னர் 1991 இல் இந்த பிரித்தானிய கம்பனி டி லா றூவால் வாங்கப்பட்டது. இதையடுத்து இலங்கையில உள்ள நிறுவனம் டி லா றூ லங்கா என பெயர் மாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பணவீக்கம் வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மூலம் கணிக்கப்பட்ட புள்ளிக்கு-புள்ளி அடிப்படையிலான பணவீக்கம் நான்காவது மாதமாக ஜூனிலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மே மாதத்தில் 5.3 வீதமாக காணப்பட்ட பணவீக்கம் ஜூன் மாதத்தில் 4.8 வீதமாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்ரர்நெற் புரோட்பான்ட் இணைப்பை அடிப்படை உரிமையாக்கியது பின்லாந்து



சர்வதேச முதல் முதலாக, புரோட்பான்ட் இணைய இன்ரநெற் இணைப்பை அடிப்படை உரிமையாக்கியது பின்லாந்து. இதனடிப்படையில், பின்லாந்து மக்கள் அனைவருக்கும் அதிவேக இன்ரநெற் இணைப்பு கிடைக்க வழிவகை செய்துள்ளது.

இது குறித்து பின்லாந்து தொலைத் தொடர்புத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,வன் மெகாபிட் பெர் செக்கன்ட் என்ற அளவில் இணைப்புத் தர தீர்மானித்துள்ளதாகவும், இதன் மூலம் புரோட்பான்ட் இன்ரநெற் இணைப்பை ,அடிப்படை உரிமையாக்கிய முதல் நாடு என்ற பெருமையை பின்லாந்து பெறுவதாகவும் இத்திட்டம் ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்திருப்பதாகவும் இதன்படி அனைவருக்கும் இணைப்பு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொழும்பின் மையப் பகுதி கிருலப்பனையில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டு வரும் ஹவலொக் சிற்றியில் முதல் கட்டப் பணிகள் முடிவடைந்து, 226 தொடர்மாடிமனைகள் விற்பனைக்கு வந்துள்ளன. அதில் ஒரு தொடர்மாடிமனையையே காண்கிறீர்கள்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4505.69 | (15.71) |
| மிலங்கா விலைச்சுட்டி | 5094.79 | (19.22) |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 933.87 | |

***உயர்வடைந்த பங்குகள்:*** த புக்கிட் ,நெஸ்ரல் லங்கா ,ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், த லங்கா ஹொஸ்பிட்டல் ,பிறவுண்& கம்பனி.

***சரிவைக் காட்டிய பங்குகள்:*** டி.எப்.சி.சி வங்கி ,வட்டவல பிளான் ரேசன்ஸ் ,கார்ஷன்ஸ் ,சிறிலங்கா ரெலிகொம் ,அற்கின் ஸ்பென்ஸ்.

# அனில் குழும சொத்து ரூ.1.42 லட்சம் கோடி

(புதுடில்லி)

கடந்த 3 மாதங்களில் அனில் அம்பானி குழுமத்தின் சொத்து மதிப்பு 14 சதவீதம் உயர்ந்து ரூ.1.42 லடசம் கோடி(இந்திய மதிப்பில்) ஆனது.இதனால் சொத்து மதிப்பு அடிப்படையில் இந்தியாவின் 3 ஆவது பெரிய குழுமமாகி உள்ளது.

கடந்த மார்ச் 31 -ம் திகதியுடன் முடிந்த காலாண்டுடன் ஜூன் காலாண்டை ஒப்பிடும் போது,பங்குச்சந்தை ஒரு சத வீதம் மட்டுமே உயர்ந்தது. ஆனால் அம்பானி குழும நிறுவன பங்குகள் மட்டும் மே மாத இறுதிக்குப் பின் கிடுகிடுவென உயர்ந்தது.

குறிப்பாக ஜூன் 30 நிலவரப்படி,அனில் குழுமச் சொத்து மதிப்பு ரூ.1 இலட்சத்து 42 ஆயிரத்து 380 கோடியாகியுள்ளது.இது மார்ச் காலாண்டை விட 14 சதவீதம் அதிகம்.

அனில் குழுமத்தின் 7 நிறுவனங்கள் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளன.இதில் ரிலையன்ஸ் பவர் மற்றும் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன் ஆகிய இரு நிறுவனங்களின் பங்கு மதிப்பு மட்டும் ரூ.16 ஆயிரத்து 969 கோடி அதிகரித்தது.இதையடுத்து இந்தியாவின் 3ஆவது பெரிய குழுமமாக உருவெடுத்துள்ளது.

சொத்து மதிப்பில் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இன்டஸ்ரீஸ் ரூ.3.57 லட்சம் கோடியுடன் முதலிடத்தில் உள்ளது.டாடா குழுமம் ரூ.3.26லட்சம் கோடியுடன் இரண்டாம் இடத்திலும்,ஸ்பெர் லைட் குழுமம் ரூ.1.31 லட்சம் கோடியுடன் 4-வது இடத்திலும் ,ஏர்டெல் ரூ.99 ,970 கோடியுடன் 5ஆவது இடத்திலும் உள்ளன.

இதேவேளைஜூனில்முடிவடைந்த



காலாண்டில் அம்பானி குழுமங்களைத் தவிர மற்ற பெரிய குழுமங்களின் சொத்து மதிப்பு சரிவடைந்தது. அம்பானி சகோதரர்கள் சமாதானமாக போக முடிவு செய்ததே இதற்கு முக்கிய காரணம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### சகோதர பாசத்துடன்...!

ஒருவருக்கொருவர்
உதவுவதை விடுத்து
சகோதரப் பிரிவுகள்
நம்மினத்தில் மலிந்ததால்
இருந்த உரிமைகளையும்
இழந்து
இழந்த உரிமைகளை
பெற முடியாது
தவிக்கிறோம் - காலம்
கடந்த பின்,
காரியம் கைமீறிய பின்
அழுதும் பயனில்லை,
ஆரவாரம் செய்தும்
பயனில்லை.

எஸ்.ஐ.தட்சாயினி
கொக்குவில்

### நட்புக்காக...

நஞ்சைத் துப்பியது
நம் உறவுகள் – அதற்கு
மருந்திட்டு ஆற்றியது
என் நட்பு...
நெஞ்சைப் பிளந்தது
உன்காதல் – அதற்கு
ஆறுதல் தந்தது
நம் நட்பு
உடலை மினுக்கும்
பொன்னகையினால்....
உதட்டில் மட்டும் புன்னகை!
நம் நட்பில் சிறு புன்னகை
மனசு பூராப் பொன்னகை.
கூடுவிட்டுக் கூடுபாயும்
வித்தை அறியின் –நான்
மனம் விட்டு
நல் மனம் செல்வேன்!
மெய் நட்புக்காக ...

பொலிகையூர்
ஸ்ரீ.சுனந்தன்

### என்ன பயன்?

கனவுகளை கலைத்த பின்
கண்ணீர் விட்டு என்ன பயன்?
உண்மைகளை மறைத்த பின்
உறவுகொண்டு என்ன பயன்?
பண்பாட்டை இழந்த பின்
படிப்பறிவால் என்ன பயன்?
ஏமாற்றி வாழ்வோரின்
ஏற்றத்தால் என்ன பயன்?
வேசங்கள் போட்டோரின்
வேண்டுதலால் என்ன பயன்?
மனச்சாட்சி மரித்தோருக்கு
மாலையிட்டு என்ன?
மனிதாபிமான உணர்வோடு
இவர்களை
மன்னித்து வாழ்ந்து விடு

அ.அஜந்தன்
கந்தர்மடம்

### இளைஞர்களே

இது ஒரு கனவு
உல்லாசமாக ஊர் சுற்றப்
புறப்படும் இளைஞர்களே
ஒரு நிமிடம்...
அக்கினித் தீயினுள்
அழிக்கப்பட்ட எம்
உறவுகளின் ஆத்மாக்கள்
அலறுகின்றன
கலைக்கப்பட்ட எம்
கனவுத் தேருக்கு
நீங்களும் சேர்ந்து
வடம் பிடிக்கிறீர்களென்று!

எம்.சந்திரகலா
யோகபுரம்

### உன் நினைவுகள்

கடற்கரை மண்ணுடன்
கதை பேசி
கொண்டிருக்கையில்
உன் நினைவலைகள்
என்னை அடிக்கடி
முத்தமிட்டுச்சென்றன
அலை என்ற வடிவில்

செ.ஷானுவி
சித்தங்கேணி

### இமயம் தொட...



பூக்களில்
படுப்பதைவிட
முட்களில் நடந்து பார்
வாழ்க்கை என்பது
என்ன என்பதை
அப்போது புரிந்து
கொள்வாய்

மாவை. நா.கஜேந்திரா

### காதல்

பாதையிலே
பார்வைகளால் மோதுண்டு
பாவையவள் உள்ளத்தில்
பாலகனாய் மூழ்கி
நால் விழிகளும்
ஒன்றுக்குள் ஒன்று
அகப்பட்டு
இதயத்தால்
இனிய மொழி பேசி
இரவலின்றி
இடைவிடாது தொடரும்
இன்ப ஊற்று

கொற்றையூர்
மகே.மேனன்



## மௌனத்தின் தேடல் – 27

### எதற்காக...

இந்த யுத்த பூமியிலே பிறந்ததால்
உருள்வதே எமது வாழ்வாகிவிட்டோம்
அன்று குண்டுகளுக்குப் பயந்து உருண்டோர்கள்
இன்று எதற்குப் பயந்து உருள்கிறீர்கள்?

இளவரசி பொன்ராசா
வடஇந்து மகளிர் கல்லூரி

### விதி

உச்சி வெயிலில்
சுடுமணலில் – நீங்கள்
நேர்த்திக் கடன்செய்ய
உங்களை
வருத்தி கொள்வதை
பார்த்து – ஒரு நிமிடம்
தவறாக எண்ணிவிட்டேன்
மீண்டும் ஒரு
வன்முறை கொலைகளா? என்று

ஸிந்துஜா.வி
மகிழடி ஒழுங்கை,
கோப்பாய்

### மண் பற்று

புரளும்போது எமை
பற்றுவது மண் தான்
உயிர் பிரியும் போது எமை
பற்றுவது மண்தான் - உயிர்
பிரியும் வரை - இதை
இழக்கலாமோ?

பற்றூரான்
பருத்தித்துறை

### வணங்குகிறேன்!

இறைவா! வரம் வேண்டி – உனை
வரவழைத்தேன்
மறுத்துவிட்டாய் – இன்று
உன் வாசல் தேடி வந்தேன்
அங்கப் பிரதட்டை செய்ய

நவரத்தினம் சதீஸ்
கந்தர்மடம்

### வேண்டுதல்

அன்பு பெருகிடாயோ
ஆணவம் அகற்றிடாயோ
அறிவு வளர்த்திடாயோ
ஆசை அழித்திடாயோவென
பிரார்த்திக்கும் மானிடர்க்கு
அங்கப் பிரதட்சணையின்
நேர்த்தி நிறைவேறணும்.

தங்கத் தமிழன்
காரைநகர்

### தேடல்

இறைவனை வேண்டி
சந்தனம் பூசி
பிரதட்சணை செய்யும்
அடியார்களே
சந்தோசம் தேடியா போகிறீர்கள்
இல்லாவிடின் விட்ட உறவை
தேடியோ போகிறீர்கள்
உம் வேண்டுதல்தான் என்னவோ

யோகராயா யாழவன்
நெல்லியடி

கடவுளே!
கடும் வெயிலில்
கரங்களில் வேப்பிலை சுமந்து
கலைந்து போன வாழ்வினை
கம்பீரமாய் தந்திடுவாய் என
காணிக்கை செலுத்துகின்றனர்.

சிவாஜினி சிவசங்கர்
சங்கானை

### அங்க உலா

அங்கங்களின் வீதியுலா கோவில்தோறும்
ஆண்டவனின் கருணைபெற
அவனியிலே பகைதீர அடியவரின்
அங்கஉலா
அன்பினிலே உளம் உருக
ஆராதிக்கிறோம் வாழ்வுபெற

விஜிதா மயிலிட்டி

### ஏன் இனி...

நாம் வாழ
நம் இனம்வாழ
நாம் வேண்டி நின்றதெல்லாம்
வீண்வேண்டிநின்ற
நிழலாய் ஆனதே
ஏன் வேண்டி இனி
எம் இனம் அழிந்தபின்னே

நா.தளையசிங்கம்
கொக்குவில்

தேர்வரும் வீதி என
தேங்காய் அடித்து
சிகப்பு பச்சை பார்த்து
தெய்வ தரிசனத்துக்காக
ஏங்கும் எம் இளசுகளின்
இன்றைய காலத்தில்
கையில் தேங்காய் பிடித்து
தெய்வத்தின்பின்
நேர்த்தியென
வலம்வரும் – இவ்
இளசுகளை நினைக்கையில்
எனது இதயம்
சற்றே சிந்திக்கிறது
இதை எழுதென்று

அல்வாயூர்
சுது (சுதன்)

## சங்குநாதம்

## மௌனத்தின் தேடல்- 28



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 16.07.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# அச்சுறுத்தல்கள், போராட்டங்கள் மூலம் இராஜதந்திரத்தை எட்ட முடியாது

## ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி

(கொழும்பு)

அச்சுறுத்தல்கள் மற்றும் போராட்டங்களின் மூலம் இராஜதந்திரத்தை எட்ட முடியாதென ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் கொழும்புக் கிளைக்கு எதிரில் விமல் வீரவசன்சவினால் நடத்தப்பட்டு வரும் போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விமல்வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்டம் பிரயோசனமற்ற முயற்சியாகவே அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விமல் வீரவன்ச பொறுப்பு வாய்ந்த இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர் எனவும் அவரது நடவடிக்கைகள் இலங்கையைப் பாதகமான முறையில் பாதிக்கும் எனவும் குறிப்பிட்ட அவர் பணியாளர்களை வெளியேறவிடாது முற்றுகையிடல் போன்ற நடவடிக்கைகள் உலக அரங்கில் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமையும் எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் எந்தவொரு நாட்டினதும் அனுதாபம் கிட்டாது எனவும், சர்வதேச அரங்கில் தனிமைப் படுத்தக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் முக்கியமான சர்வதேச நிறுவனமொன்றை அச்சுறுத்துவதன் மூலம் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

நிபுணர்கள் குழு நியமனம் தேவையற்றது என குறிப்பிட்டுள்ள அதேவேளை, நிபுணர்கள் குழு தொடர்பில் இலங்கையில் அதீத அல்லது பலவீனமான கருதுகோள்கள் நிலவுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயக ரீதியான நாடு என்ற அடிப்படையில் இலங்கை தொடர்பாக நிபுணர்கள் குழு அமைக்கப்பட வேண்டிய அவசியமில்லை எனவும், குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனவும் தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் பான்கீ மூன் நிபுணர்கள் குழுவினை நியமிப்பதில் தவறில்லை எனவும், அது இலங்கையின் இறைமையைப் பாதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் இறைமைக்கு குந்தகம் ஏற்படும் வகையிலான தலையீடுகளை எதிர்க்கும் உரிமை இலங்கைக்கு காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சர்வதேச அரங்குகளில் நெருக்கடியான நிலைக்குத் தள்ளிவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டம் இழக்கப்பட்டமைக்கு முன்னாள் வெளி விவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் முக்கிய காரணமென அவர் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்படுவதற்கான எந்தவித அவசியமும் தற்போது கிடையாதென சுட்டிக்காட்டிய அவர் யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் இடையில் வேறுபாடு இருக்கவேண்டுமென குறிப்பிட்டுள்ளார். (6)

## புல்லாங்குழல் இசை நிகழ்வு

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நோர்வே நாட்டிலிருந்து வருகை தந்த செல்வி மீரா.திருச்செல்வம், தீபா திருச்செல்வம் ஆகிய சகோதரிகளது புல்லாங்குழல் இசை காரைநகர் கிழவன்காடு கந்தசாமி ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது என மேற்படி மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (6)

# வடபகுதி வாக்காளர்கள் தமது வாக்குரிமையை இழக்கும் அபாயம்!

## கபே அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

வடபகுதி வாக்காளர்கள் தமது வாக்குரிமையை இழக்கக்கூடிய அபாயம் நிலவுவதாக முன்னணி தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களில் ஒன்றான கபே அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

15 ஆண்டுகளுக்குப் பின்னர் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும், இந்த நடவடிக்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவகச்சேரி, கோப்பாய்,மானிப்பாய் மற்றும் காங்கேசன்துறை போன்ற பிரதேசங்களில் வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பங்கள் இன்னமும் விநியோகம் செய்யப்படவில்லை என கபே அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அநேகமான பிரதேசங்களில் கிராம உத்தியோகத்தர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் போதுமான அளவு உட்கட்டுமான வசதிகள் காணப்படாமையும் வாக்காளர் பதிவினை உரிய முறையில் மேற்கொள்ள முடியாமைக்கான மற்றுமொரு முக்கிய காரணி எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# வவுனியாவில் கடும் காற்றுடன் மழை

(கொழும்பு)

வவுனியாவில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக ஏழு வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் பயன்தரு மரங்களும் அழிவடைந்துள்ளன.

ஈச்சங்குளம் கிராமசேகர் பிரிவுக்குட்பட்ட கருப்பனிச்சங்குளம் பகுதியில் மூன்று வீடுகளும் மறவன்குளத்தில் ஒரு தேவாலயம் உட்பட இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன.

மேலும் கிடாச்சூரி பகுதியிலும் இராசேந்திரன்குளம் கிராமசேகர் பிரிவுக்குட்பட்ட பொன்னவரசன் குளம் கிராமத்தில் இடம்பெயர்ந்து வந்து தங்கியிருந்த மூன்று குடும்பங்களின் கொட்டகைகளும் சேதமடைந்துள்ளன.

கடும் காற்றினால் சேதமடைந்த வீடுகள் தொடர்பாக அந்தந்த பிரிவுகளின் கிராம உத்தியோத்தர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக வவுனியா செயலகம் தெரிவித்துள்ளது .(6)

# ஐ.நா.நிபுணர்கள் குழுவிற்கு 44 அமைச்சர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நிறுவப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவிற்கு 44 அமைச்சர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

நிபுணர்கள் குழுவின் நடவடிக்கைகளினால் நாட்டின் இறைமைக்கும் சுயாதீன தன்மைக்கும் இடையூறு ஏற்படும் எனத் தெரிவித்த அவர்கள் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் பணிகளை அரசாங்கம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

என்ன காரணத்திற்காக இவ்வாறான ஓர் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டதென்பதை தெளிவுபடுத்துமாறு அமைச்சர்கள் பான் கீ மூனுக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளதுடன் குறித்த நிபுணர்கள் குழுவினை கலைக்குமாறு அவர்கள் பான் கீ மூனிடம் கோரியுள்ளனர்.

பான் கீ மூனின் நடவடிக்கைகளினால் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (6)

# வட்டிக்கு கடன் பெற்றதனால் தான் நாட்டை பயங்கரவாதத்திலிருந்தும் மீட்க முடிந்தது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

உலக நாடுகள் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டுள்ள அதேவேளை அரசின் பொருளாதாரம் 6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இதனூடாக தனிநபர் வருவாயையும் அதிகரித்துள்ளோம் என அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமான போதே அமைச்சர் பந்துல குணவர்த் தன மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சர்வதேச நிதி நிறு வனங்களிடமிருந்து அதிக வட்டிக்கு கடன் பெற்றமை தவிர்க்க முடியாதது. இவ்வாறு அதிக வட்டிக்கு கடனை பெற்றுக்கொண்ட தால் தான் நாட்டைப் பயங்கரவாதத்திலிருந் தும் மீட்க முடிந்தது எனவும் பிரிந்து கிடந்த பெரும் பகுதி நிலத்தையும் ஒன்றிணைக்க முடிந்தது என்றும் தெரிவித்தார்.

எமது அரசாங்கம் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதாகவும் மக்களிடமிருந்து அதிக வட்டியை அறவிடுவதாகவும் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆனால் வட்டி அறவீடுகளின் ஊடாகத் தான் நாட்டை கொண்டு நடத்துவோம் எனவும் அரச ஊழியர்களின் கொடுப்பனவுக்கென பெருந்தொகை பணம் செலவிடப்படுகிறது என்றும் குறிப்பிட்ட அவர் எதிர்க்கட்சியினரின் கூற்றுக்கு செவிமடுத்தால் அரச ஊழியர்களின் எண்ணிக்கையை 6 இலட்சமாகக் குறைக்க நேரிடும் எனவும் அத்துடன் இனி வரும் காலங்களில் அரச சேவைக்கு ஆள் சேர்ப்பும் செய்யாது இருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (6)



உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை அழகுபடுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் இடம்பெற்ற மரம் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய பயிற்சி மாணவர்களையும் அருகில் வித்தியாலய அதிபர் மு.விக்னேஸ்வரன், பகுதித் தலைவர் மா.சிறிகாந்தன் ஆகியோர் நிற்பதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- கோப்பாய் நிருபர்)

# ஏ-9 வீதியூடான பிரயாணத் தடை காரணமாக ஐ.நா. நிறுவனங்களின் பணிகள் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தைச் சேர்ந்த வாகனங்கள் ஏ9 வீதியூடாக வன்னிப் பிரதேசத்திற்கு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள புதிய பிரயாண நடைமுறை காரணமாக ஐக்கிய நாடுகள் நிறுவனங்களினால் வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற மனிதாபிமானப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் தற்காலிக வீடுகள் அமைத்தல், குடிநீர் விநியோகம், மலசலகூடங்களை அமைக்கும் பணிகள் போன்ற முக்கிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா.நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், தினசரி இந்தப் பகுதிகளுக்குச் சென்று மனிதாபிமானப் பணிளை மேற்கொண்டு வந்ததாகவும் தற்போது ஒரு வாரத்திற்கு மேலாக இவர்கள் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதனால் இந்தப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள கிராமங்களில் ஐ.ஓ.எம். நிறுவனமே அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற பல வேறு பணிகளை முன்னெடுத்து வந்தது.

தற்போதைய நிலைமை காரணமாக அந்த நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வன்னிப் பிரதேசத்திற்குச் செல்லாததனால் அந்த நிறுவனம் மேற்கொண்டு வந்த பணிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண உணவு விநியோகத்தை மேற்கொண்டு வருகின்ற உலக உணவுத் திட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களில் வன்னிப் பிரதேசத்திற்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ள போதிலும் மாற்று ஏற்பாடாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பாரஊர்திகளில் இந்த உணவுப் பொருட்கள் அங்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான நிவாரண உணவு விநியோகத்தில் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரியவருகின்றது.

ஐ.நா. நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு மட்டுமல்லாமல், ஜனாதிபதி செயலணிக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று வன்னிப் பிரதேசத்தில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வந்த உள்ளூர் - சர்வதேச தொண்டு நிறுவனங்களும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே வன்னிப் பிரதேசத்திற்குச் செல்லவேண்டும் என்ற புதிய பிரயாண நடைமுறை கடந்த ஒரு வாரத்திற்கு முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவித்தலுக்கமைய பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காகப் பலநிறுவனங்கள் விண்ணப்பித்துள்ள போதிலும் இதுவரையில் அந்த அமைச்சிடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (6)

## ஜி.எஸ்.பி.பிளஸ் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை



(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த வாரம் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி, ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பில் இலங்கை அரசுடன் பேசத்தயார் என்று குறிப்பிட்டது தொடர்பில் தாங்கள் கவனம் செலுத்தி வருவதாகவும் இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்பாக கலந் தாலோசிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

## பரத நாட்டிய அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

திருமதி வசந்தி குஞ்சிதபாதத்தின் மாணவி செல்வி ஜனனி சிவலிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா. சண்முகலிங்கன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6)

## நீதிமன்ற வளாகத்திற்குள் மந்திரவாதியொருவர் கைது

(கொழும்பு)

முன்னாள் பிரதியமைச்சர் சந்தனகத்திரி ஆராச்சி சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணையொன்றின்போது நீதிமன்ற வளாகத்திற்குள் காணப்பட்ட ஒருவர், மந்திரவாதி என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இவ்வழக்கு விசாரணையின் போது மந்திரவாதியொருவர் நீதிமன்ற வளாகத்திற்குள் வந்திருப்பதாகவும் இதுகுறித்து விசாரணை நடத்துமாறும் அரச தரப்பு சட்டத்தரணி நீதிபதியிடம் கோரினார்.

இதையடுத்து முனகமகே பொன்குணவர்த்தன என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன் இது தொடர்பாக விசாரணை நடத்துமாறும் பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (6)




அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தினால் வழங்கப்படுகின்ற கலை இலக்கியப் பணிக்கான உயரிய விருது இம்முறை கொழும்பு தமிழ்ச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. பண்டிதர் பொன்.சுகந்தன் விருதினை வழங்குவதனையும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் சட்டத்தரணி இராஜகுலேந்திரா பெற்றுக்கொள்வதனையும் மத்தியில் கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராஜா நிற்பதனையும் படத்தில் காணலாம்.

## கொமர்ஷல் வங்கியின் புதிய கிளைத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை திறப்பு நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.27 மணிக்கு பலாலி வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதில் இலங்கையிலுள்ள வங்கித் துறையில் காணப்படும் அனைத்து நவீனத்துவ சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இவ் வைபவத்திற்கு அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் படி வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (6)


## இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



www.inuvilkanthan.com

### தீர்த்தத் திருவிழா

### இணுவைக் கந்தன் தீர்த்தோற்சவம் காண வாரீர்

தீர்த்தோற்சவம் காணவாரீர் பார்த்தோர் மனம் கவரும்
பன்னிரு கை வேலனின்
தீர்த்தோற்சவம் காண

வார்த்தெடுத்த தங்கமேனி நல்ல வார்த்தைகள்
பேசிடும் அரிய நல்ஞானி கீர்த்தியான அருள்கொண்ட
அந்தப் பார்த்திபன் கண்ணனின் அரிய நல் தங்கை
மகன்
தீர்த்தோற்சவம் காண

பால் பழம் பன்னீரினாலே ஞானப்பழமான
வேலனுக்கு பக்குவ நீராட்டுவேல் கொண்டு
வினை தீர்க்கும் வேலன் ஞாலம் புகழ்ந்திட
அருள் வேண்டி திருநீராட்டும்
தீர்த்தோற்சவம் காண

பக்தர்கள் சித்தர்கள் கூடி பக்திப் பரவசத்திலே
பால்க் காவடி ஆடி தேர்த்திருநாளன்று
மறுநாள் அடியார் நேர்த்தி செய்தே
திருமுழுக்காட்டிடும்
தீர்த்தோற்சவம் காண

பட்டுடை மணிகளொடு மாலை உடன்
பதக்கமும் மார்பினில் சேர்ந்தே யொளிக்க
முத்துக்கள் பதித்த மணி மகுடமும் விளங்க
பச்சை மயில் மீது நீ ஏறிவருவாய்
தீர்த்தோற்சவம் காண வாரீர் இணுவை
பன்னிரு கை வேலனின் தரிசனம் பாரீர்

இணுவையூர் செல்வம்-பவானந்தமூர்த்தி

### தீர்த்தமாடி வரும் தமிழின் வேந்தனே!

தீர்த்தம் இன்று ஆடிவரும்
இணுவைக் கந்தனே
தீர்வொன்று நீ தருவாய்
இணுவைக் குமரனே
தந்தைக்கு உபதேசம்
புரிந்த சாமிநாதனே
தப்பாது எமைக்
காப்பாய் தங்கவேலனே
முப்போதும் உன்பாதம்
பணிந்தோம் முருகு மாலனே
முறையாய் நாம் வாழ
அருள் பொழிவாய்
தமிழின் வேந்தனே !

குறிஞ்சிக்கவி,0 குப்பிளான்

### ஆதரிக்கும் ஆறுமுகா

அச்சமில்லா வாழ்வழித்தே...
எமை ஆதரிக்கும் ஆறுமுகா
பச்சை மயில் மீதேறி
பறந்தோடி வருமழகா (ல்)

திருவுள்ளம் மகிழ்ந்திடவே
உன் தீர்த்தோற்சவம் காணவே
அருள் வழங்கும் நன் நாளிலே
நல் ஆனந்தமே பெறுவோமே

இணுவை சண் ஜெகன்

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் தீர்த்தத்திருவிழா இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை காலை விசேட அபிஷேக ஆராதனை இடம்பெற்று பிற்பகல் 4 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. மாலை 4 மணியளவில் விசேட நிகழ்ச்சியாக தவில் நாதஸ்வர கச்சேரி இடம்பெற உள்ளது.

தவில் நாதஸ்வர கலைஞர்கள் திரு. இ.சுந்தரமூர்த்தி குழுவினர், என்.ஆர்.கோவிந்தசாமி புதல்வர்கள், ரத்தினகுமார் குழுவினர், வாகீசன் குழுவினர் மற்றும் உலகப் புகழ் சின்னராசாவின் புதல்வர்கள் திரு. ரவீந்திரன் குழுவினர், சுதாகரன் குழுவினர் மற்றும் தென் இந்தியக் கலைஞர்களும் பங்குபற்றவுள்ளனர்.

முருகன் அடியார்கள் தீர்த்தத் திருவிழாவில் கலந்து நாத கான மழையில் நனைவதோடு முருகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெறுவீராக.

(1709) தீர்த்தத் திருவிழா உபயகாரர்கள்

# ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்ட நிராகரிப்பிற்கும் தமக்கும் தொடர்பில்லை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் நிராகதிக்கப்பட்டமைக்கும் தமக்கும் தொடர்பு கிடையாதென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சலுகைத் திட்டத்தை முடக்கும் வகையில் செயற்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என்றும் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை இரத்து செய்யுமாறு வலியுறுத்தக்கூடிய ஆற்றல் தமக்குக் கிடையாது எனவும் அதற்கான தேவையுமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

சலுகைத் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகளை அரசாங்கம் உரிய முறையில் பூர்த்தி செய்யத் தவறியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)

# ஐ.நா.வுடன் ஒத்துழைக்குமாறு அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் சொந்த நலனைக் கருத்தில் கொண்டு ஐ.நா. வுடன் இலங்கை ஒத்துழைத்துச் செயற்பட வேண்டுமென்று அமெரிக்கா கூறியுள்ளது.

போர்க்குற்ற நிபுணர்குழுவுக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்புகள் வெளிவந்துள்ள நிலையில் ஐ.நா. கொழும்பிலுள்ள யூ.என்.டி.பி. அலுவலகத்தை மூடியுள்ளது.

இந்த நிபுணர்குழுவை ஏற்றுக்கொண்டு அவர்களின் ஆலோசனையையும் பெற்றுக் கொள்வது அவசியம் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் மார்க்ரோனர் நிருபர்களுக்கு கடந்த வியாழக்கிழமை தெரிவித்ததாக ஏ.எவ்.பி. செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

சமூகங்களிடையே நீண்ட கால நல்லிணக்கத்துக்கான பணிகளில் ஈடுபடுமாறு முன்னர் இலங்கையை அமெரிக்கா வலியுறுத்தியிருந்தது. (6)

# மலேசிய அரசால் ஈழத்தமிழ் அகதிகள் தொடர்ந்தும் வஞ்சிப்பு

இலங்கையின் முகாம்களில் இருந்து தப்பித்து கப்பல் மூலம் வேறுநாடுகளுக்குச் செல்லும்போது மலேசியப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து இருட்டறை முகாம்களில் தவித்த 75 தமிழ் மக்களையும் ஐ.நா. அகதிகளாகஏற்றுக்கொண்டது.

ஐ.நா. அகதிகளாக ஏற்றுக்கொண்ட பிறகும் மசேசிய அரசாங்கம் அவர்களை விடுதலை செய்யாமல் இருட்டறையிலேயே அடைத்து வைத்துள்ளது. அவர் கள் இன்னும் ஒருவாரத்திற்குள் விடு தலை செய்யப்பட வேண்டும்.

அகதிகளுக்கான உரிமைகள் வழங்கப்படவேண்டும். இவையெல்லாம் மறுக்கப்படும் பட்சத்தில் மலேசிய பாராளுமன்றம் நோக்கி தமிழர்களை ஒன்றிணைத்து மலேசியாவில் மாபெரும் பேரணி நடத்துவோம் என்று மாற்று செய லணி அமைப்பு அறிவித்துள்ளது.

இந்நிலையில் மலேசிய அரசாங்கம் இந்த ஈழத்தமிழர்கள் கோரிக்கைகளை வலி யுறுத்தி உண்ணா விரதம் இருந்த போது பெண்கள், குழந்தைகளுடன் பேசலாம் என்று அனுமதி வழங் கியது. ஆனால் அதன் பிறகு இன்று வரை பேசுவதற்கு கூட அனு மதிமறுக்கப்பட்டு வருகிறது.

சில தினங்களாகவே பெண்கள் குழந்தைகளின் நிலை பற்றி அறிந்துகொள்ள இருட்டறை முகாமில் உள்ள ஆண்கள் முகாம் அதிகாரியிடம் பல முறை அனுமதி கேட்டும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. இதனால் அவர்களின் நிலை பற்றி தெரியாமல் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் அங்குள்ள ஆண்கள். (6)

# ஐ.நா. பிரகடனங்களுக்கு புறம்பான முறையில் பான் கீ மூன் செயற்பட்டுள்ளார்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு புறம்பான வகையில் பொதுச் செயலாளர் பான் கீ மூன் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நிபுணர்கள் குழுவினை உருவாக்குவதற்கு எடுத்தத் தீர்மானம் இலங்கையின் இறைமைக்க குந்தகம் ஏற்படும் வகையில் அமையப் பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு பிரகடனத்தின் 7ஆம் சதுரத்தின் அடிப்படையில் நிபு ணர்கள் குழு நியமிப்பதற்கு முன்னர் பாதுகாப்புப் பேரவையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டிருக்க வேண்டுமெனவும் பான்கீ மூனின் இந்த நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அரசியல் மற்றும் மனித உரிமைகளை உரிய முறையில் அரசாங்கம் பேணத் தவறியமையினாலேயே ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கைத் தொடர்பில் நிபுணர்கள் குழுவினை நியமித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகளை பேணுமாறு எந்தவொரு நாடும் அழுத்தம் கொடுக்கும் அளவிற்கு நாம் நடந்து கொள்ளக் கூடாதென தெரிவித்த அவர்,

நட்பு நாடுகளை இழக்கக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் சர்வதேச ரீதியில் நன்மதிப்பை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (6)

# வரவு-செலவுத்திட்டம் தொடர்பான கவனத்தை திசை திருப்பும் நோக்கில் உண்ணாவிரதபோராட்டம்

## கலாநிதி ஹர்ஷ டிசில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் 2010ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டம் தொடர்பான கவனத்தை திசை திருப்பும் நோக்கில் விமல் வீரவன்ச உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தேசியவாத உணர்வுகளை முன்னிலைப்படுத்தி நடத்தப்பட்டு வரும் இவ்வாறான போராட்டங்களினால் இலங்கையின் பொருளாதாரம் பாரிய இழப்புக்களை எதிர்நோக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆறு வருடங்களாக இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலவி வருவதாகவும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி 97 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமாயின் பாதீட்டுப் பற்றாக் குறையை ஐந்து வீதமாகவும் பொருளாதார வளர்ச்சியை எட்டு வீதமாகவும் பராமரிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு, வெளிநாட்டு தனியார்துறை முதலீடுகளை அதிகரித்தல் மற்றும் கடன் முதலீடுகளை உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை நாட்டின் மொத்தக் கடன் தொகையானது அரச மொத்த வருமானத்தின் 108 மடங்காகக் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு வெளிநாட்டு தனியார் முதலீகளை அதிகரிக்க முடியும் என்ற போதிலும் விமல் வீரவன்ச போன்றவர்களின் நடவடிக்கைகளினால் இவ்வாறான அரிய சந்தர்ப்பங்கள் இழக்கப்படலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பொருளாதர கொள்கை தற் போது மஹிந்த கொள்கை மற்றும் பசில் கொள்கை ஆகிய இரண்டுக்கும் இடையில் சிக்கியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (6)

# எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்; தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

இருட்டறைக்குள்ளும் இரும்புக் கம்பிகளுக்குமிடையில் பல வருடங்களாக வாழும் எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் மீண்டும் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளாகிய நாங்கள் கடந்த யூன் 26 அன்று எங்கள் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் அல்லது பிணையிலாவது செல்ல அனுமதி அளிக்குமாறும் தங்களுக்கு பத்திரிகை மூலம் வேண்டுகோள் விடுத்திருந்ததும் அதற்குரிய பதில் ஏதும் அளிக்கவில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

கடந்த காலங்களாக எங்கள் விடுதலை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என பல தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தும் ஏமாற்றத்தினையே எதிர்நோக்கியுள்ளோம்.

5 -17 வருடங்களாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாங்கள் வெளி உலகில் வாழத் தகுதியற்றவர்களா? தாங்க முடியாத வலிகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொண்டிருக்கும் அனைவரும் மன ரீதியாக வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளோம்.

இத்தனை வருடங்களாக பிணையிலாவது செல்ல விடாமல் பொதும ன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படாமலும் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எதிர்பார்த்து இலவு காத்த கிளியைப்போல் சிறைச்சாலையில் வருடங்கள் கழிந்தது தான் எங்கள் வாழ்வின் கதை.

எமது நாட்டில் தற்போது சுமுகமான சூழல் இடம் பெறுகின்ற வேளையில் எங்கள் விடுதலை தொடர்பாக தங்களால் மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் இம் மடலை வரைகின்றோம்.

நாங்கள் நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக சிறந்த செயற்றிட்டங்களை நடை முறைப்படுத்தி வருவதுடன் சரணடைந்துள்ள விடுதலைப்புலிகளின் போராளிகளுக்காக எதிர்கால வாழ்க்கை தொடர்பாக சிறந்த நடவடிக்கைகளும் எமக்கு மிகவும் சந்தோஷத்தை தருகிறது.

இருப்பினும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எங்களுக்கு விடுதலை தொடர்பாக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பது கவலையைத் தருகின்றது.

மக்களுக்காக பல நல்ல செயற்றிட்டங்களைச் செய்யும் நீங்கள் எங்கள் வேதனைகளைப்புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறோம்.

விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி உண்ணாவிரதப்போராட்டங்கள் மற்றும் கடிதங்கள் அனுப்பியும் எதுவும் பலனளிக்கவில்லை. ஜனாதிபதியிடம் எங்கள் விடுதலை தொடர்பாக எடுத்துரைத்து அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இத்தனை வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் எங்கள் பெற்றோர், மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவுகளைப் பிரிந்து வேதனையில் உள்ளோம். அவர்களோடு சேர்ந்து வாழ வழியேதும் ஏற்படாதா என்ற மன வேதனைகளுடன் இறுதியாக தங்களை நாடியுள்ளோம்.

எங்கள் குடும்பத்தாருடன் வாழ வேண்டிய நாங்கள் அனைவரும் இருட்டறைக்குள்ளும் கம்பிகளுக்குமிடையிலும் எங்கள் வாழ்க்கை தொடர்கிறது. எங்களை குடும்பங்களுடன் சேர்ந்து வாழ வைப்பது உங்கள் கைகளிலேயே உள்ளது.

நாங்கள் சிறு சிறு தவறுகள் செய்திருந்தால் எங்களை மன்னித்து பொது மன்னிப்பு தாருங்கள். எந்தப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் தவறு செய்தால் திருந்தி வாழ சந்தர்ப்பம் கொடுப்பார்கள். அதுபோல் நீங்களும் எங்களுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று தமது மடலில் எழுதியுள்ளனர். (6)

# ASUS® CORNER



## a week CELEBRATION

### எமது யாழ். கிளையின் ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு

**40,750/=**
- 1.6 GHz Processor
- Atom 945 GCLF
- 1GB DDR2
- 250GB Hard Disk
- ATX Casing
- DVD Writer Liteon
- Keybord / Mouse
- 16" LCD Asus
- Speaker 320W
- UPS Power III

**47,750/=**
- 2.7 GHz Processor
- Asus G31
- 1GB DDR2
- 250GB Hard Disk
- ATX Casing
- DVD Writer Liteon
- Keybord / Mouse
- 16" LCD Asus
- Speaker 320W
- UPS Power III

**52,000/=**
- 2.7 GHz Processor
- Asus G41
- 1GB DDR2
- 320GB Hard Disk
- ATX Casing
- DVD Writer Liteon
- Keybord / Mouse
- 19" LCD Asus
- Speaker 320W
- UPS Power III



**54,000/=**
- 2.93 GHz Processor
- Asus G31
- 1GB DDR2
- 320GB Hard Disk
- ATX Casing
- DVD Writer
- Keybord / Mouse
- 16" LCD Asus
- Speaker 320W
- UPS Power III

**55,000/=**
- 2.7GHz Processor
- Asus G41 (DDR - 3)
- 2GB DDR3
- 250GB Hard Disk
- ATX Casing
- DVD Writer Liteon
- Keybord / Mouse
- 16" LCD Asus
- Speaker 320W
- UPS Power III

**64,000/=**
- 2.93GHz Processor
- Asus G41 (DDR - 3)
- 2GB DDR3
- 250GB Hard Disk
- ATX Casing
- DVD Writer Liteon
- Keybord / Mouse
- 19" LCD Asus
- Speaker 320W
- UPS Power III




**MOTHER BOARD**

| | |
|---|---|
| Asus G31 | 6,000/= |
| Asus P5QPL-AM- | 7,800/= |
| Asus P5KPL-AM-SE | 6,200/= |
| Asus P5KPL-AM-IN | 6,100/= |
| Asus P5KPL-PS | 7,100/= |
| Asus P5G41T-MLX | 8,500/= |
| Asus P5Q3 | 29,000/= |
| Atom 954 GCLF | 8,100/= |

**HDD**

| | |
|---|---|
| 250 GB | 5,300/= |
| 320 GB | 5,800/= |
| 500 GB | 7,200/= |

**RAM**

| | |
|---|---|
| 1 GB DDRI | 5,800/= |
| 1 GB DDR2 | 3,300/= |
| 2 GB DDR2 | 6,400/= |
| 2 GB DDR3 | 7,200/= |

**PROCESSOR**

| | |
|---|---|
| 2.7 GHz | 8,400/= |
| 2.93 GHz | 14,300/= |

**DVD RW**

| | |
|---|---|
| 24X Liteon | 3,200/= |
| 24X ASUS | 4,000/= |
| 22X LG (IDD) | 3,800/= |

**UPS**

| | |
|---|---|
| Power III | 3,900/= |

**MONITOR**

| | |
|---|---|
| 16" AOC | 12,200/= |
| 16" A-Open | 12,600/= |
| 16" ASUS | 13,100/= |
| 16" View Sonic | 14,750/= |
| 16" A-Open | 14,900/= |
| 19" LG | 16,100/= |
| 19" ASUS | 16,800/= |
| 19" Samsung | 17,500/= |
| 19" View Sonic | 19,500/= |

எமது கிளையின் செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருந்த
அனைத்து வாடிக்கையாளருக்கும், நல்ல உள்ளங்களுக்கும்,
நன்றியைத் தெரிவிப்பதுடன்,
கணினிக் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளருக்கும்
கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படும்.




அனைத்துக்
கணினி மற்றும்
கணினி
உதிரிப்பாகங்களுக்கும் **10%**
விலைக்கழிவு

108, Luxan Plaza, Navalar Road, Jaffna.
Tel : 021 2221048

(சி/627)

# இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசுபவர்களை தண்டிக்க புதிய சட்டம்

## அமைச்சர் துரைமுருகன் தெரிவிப்பு



வெளிநாட்டுப் பிரச்சினையை மையப்படுத்த மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராகவும்,இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் பேசுபவர்களை கடுமையாகத் தண்டிக்க விரைவில் புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று தமிழக சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் விடுமுறைக்கால நீதிமன்ற ஆரம்பவிழா நேற்றுக்காலை நடைபெற்றது.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி இக்பால் தலைமை ஏற்று புதிய நீதிமன்றத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசுகையில்,

“ தமிழ்நாட்டில் சிலர் வெளிநாட்டு பிரச்சினையை மையப்படுத்தி மத்திய,மாநில அரசுகளுக்கு எதிராகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் பேச்சுரிமை என்ற போர்வையில் பேசி வருகிறார்கள்.

அத்தகைய நபர்களைத் தண்டிக்க தற்போது சட்டங்கள் உள்ளன. இருந்தாலும், அத்தகைய நபர்கள் இனி புதிய சட்டத்தையும் சந்திக்கவேண்டும்.இவர்களை தண்டிக்க விரைவில் கடுமையான சட்டம் கொண்டு வரப்படும்” என்றார்.

மேலும்தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு 153 புதிய நீதிமன்றங்கள் கட்டப்பட்டுள்ளன. 190 சிவில் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

புதிது புதிதாக நீதிமன்றங்கள் கட்டப்படுவதுடன் நீதிபதிகளும் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இருப்பினும் வழக்குகள் குறைந்தபாடில்லை. வளரும் சமுதாயத்தில் குற்றங்கள் அதிகரிக்கத்தான் செய்யும். சென்னையில் உள்ள குடும்பநல நீதிமன்றத்தில் 14,160 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதற்கு விரைந்து தீர்வு காண்பதற்குத்தான் விடுமுறைக்கால நீதிமன்றங்கள் தொடக்கப்பட்டுள்ளன என்றார் துரைமுருகன்.

இந்நிகழ்ச்சியில் தலைமை நீதிபதி இக்பால் பேசுகையில்,

வேலைக்குச் செல்லும் கணவன் -மனைவிக்கிடையே மாலைநேரங்களில் தான் சிறிய அளவில் கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன. பின்னர், அவையே பூதாகரமாக வெடித்து நிரந்தர பிரிவு ஏற்படும் சூழல் ஏற்படுகிறது.

இதற்குத் தீர்வு காண்பதற்கு வசதியாக மாலை 5மணி முதல் இரவு 10 மணிவரை செயல்படக்கூடிய உதவி மையமும் குடும்பப் பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காகத் தீர்வு மையமும் திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது” என்றார். (6)

# ஆன்மீக பிரசாரம் செய்ய நித்தியானந்தாவிற்கு அனுமதி

(பெங்களூர்)

ஆன்மீகப் பிரசாரம் செய்ய நித்தியானந்தாவிற்கு அனுமதி வழங்கி கர்நாடக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகை ரஞ்சிதாவுடனான ஆபாச சீடிக்கள் வெளியான விவகாரத்தில் கைது செய்யப்பட்டிருந்த நித்தியானந்தா அண்மையில் நிபந்தனை பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

நிபந்தனைகளைத் தளர்த்துமாறு கோரி நித்தியானந்தா தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அப்போது 15 நாட்களுக்கு ஒருமுறை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி, 30 நாட்களுக்கு ஒருமுறை கையெழுத்திட்டால் போதும் என்று நீதிபதி சுபாஷ் உத்தரவிட்டார். பிடதி ஆச்சிரமத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது என்ற நிபந்தனையும் தளர்த்தப்பட்டு, நித்யானந்தா ஆன்மீக பிரசாரம் செய்யவும் நீதிபதி அனுமதி வழங்கினார். (6)

# ஆட்சி மாற்றத்தின் பின் மீனவர்களின் துயருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்

## ஜெயலலிதா அறிவிப்பு



“மீனவ நண்பனாம் எம்.ஜி.ஆரின் பொற்கால ஆட்சி தமிழகத்தில் அமைந்தவுடன் தமிழக மீனவர்களின் துயரங்களை துடைப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் அவர்களுடைய இன்னல்கள் களையப்படும்”

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தெடர்ச்சியாகக் கொல்லப்பட்டு வருகின்றமையைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் அ.தீ.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## பாரதச் செய்திகள்

அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

நாகப்பட்டணம் மாவட்டத்தின் வேதாரண்யத்தை அடுத்த வெள்ளப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் கோடியக்கரைக்கும், தோப்புத் துறை கடற்பகுதிக்கும் இடையே படகுகளில் கடந்த புதன்கிழமை மீன்பிடித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் இம் மீனவர்களின் படகுகளை சுற்றிவளைத்து கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் செல்லப்பன் என்ற மீனவர் உயிரிழந்து விட்டார்.

தமிழக மீனவர்களின் படகுகளில் ஏறி அதிலிருந்த மீன்கள், உணவுப் பொருட்கள் மற்றும் வலைகளை இலங்கை கடற்படையினர் கடலில் தூக்கி வீசியுள்ளதுடன் அறிவழகன் என்பவரின் படகில் ஏறிய இலங்கைக் கடற்படையினர் அதில் இருந்தவர்களை கொடூரமாகத் தாக்கி விரட்டி அடித்துள்ளனர்.

இதேபோன்று, நாகப்பட்டணம் மாவட்டம் புஷ்பவனம் கிராமத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் நிர்வாணப்படுத்திக் கொடுமைப்படுத்தியுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் இந்த கொடூரச் செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களில் இலங்கை அரசு அடிக்கடி ஈடுபட்டு வருகிறது. இதன் விளைவாக தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மீனவ நண்பனாம் எம்.ஜி.ஆரின் பொற்கால ஆட்சி தமிழகத்தில் அமைந்தவுடன் மீனவர்களின் துயரங்களை துடைப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் அவர்களுடைய இன்னல்கள் களையப்படும் என்று கூறினார். (6)

# தண்டுவடம் முறிந்த நாய்க்கு ஸ்டெம்செல் தெரபி மூலம் சிகிச்சை

## கால்நடை மருத்துவத்தில் சாதனை



உலகளவில் முதல் முறையாக ஸ்டெம் செல்தெரபி எனப்படும் சிகிச்சை முறையின் மூலம், தண்டுவடம் முறிந்த ஒரு நாய் முழுமையாகக் குணப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

விபத்து ஒன்றில் தண்டு வடம் முறிந்து உடலின் பின்பகுதி முழுவதும் செயலிழந்து போயிருந்த ஒரு நாய்க்கே இப்படியான மருத்துவம் வெற்றிகரமாக செய்யப்பட்டதாக அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வைத்தியர் பி.தங்கராஜு தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான குறிப்பிட்ட நாயின் எலும்பு மச்சையிலிருந்து செல்களை எடுத்து, அடிபட்ட பகுதிக்குள் செலுத்திய முப்பது நாட்களில் அந்த நாயின் உடல் நிலையில் குறிப்பிடத்தக் தகுந்த முன்னேற்றம் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த முன்னேற்றத்தை அடுத்து, மீண்டும் அதேபோன்று ஒரு முறை செய்யப்பட்ட போது வியத்தகு வகையில் அந்த நாய் தனது முழு எடையையும் பின்னங்கால்களில் போட்டு எழுந்து நிற்க முடிந்தது, பின்னர் நடக்கவும் செய்தது எனவும் வைத்தியர் தங்கராஜு ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்தார்.

அமெரிக்காவில் எலிகளுக்கு செயற்கையான வகை யில் தண்டுவடத்தில் எலும்பு முறிவை ஏற்படுத்தி அதற்கு ஸ்டெம் செல் தெரபி மூலம் சிகிச்சையளித்து அந்த எலிகளை நடக்கவைத்துள்ளனர் என்றாலும், நாய்கள் போன்ற பெரிய பிராணிகளுக்கு வெற்றிகர மாக தமது மருத்துவர்கள் சிகிச்சையளித்துள்ளதாகவும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் தெரிவித்தார்.

தம்மிடமுள்ள ஆதாரங்கள், ஆராய்ச்சிக் குறிப்புகள், சஞ்சிகைகளில் வந்துள்ள கட்டுரைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, தண்டுவடம் முறிந்த ஒரு மிருக நோயாளியை ஸ்டெம் செல்தெரபி மூலம் முழுமையாகக் குணப்படுத்தியுள்ளது உலகிலேயே இதுதான் முதல் முறை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# தமிழக மீனவர் பிரச்சினைக்கு இலங்கை அரசுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை

## அமைச்சர் சிதம்பரம் உறுதி

(சென்னை)



தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்ட பிரச்சினை குறித்து இலங்கை அரசுடன் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் கருணாநிதிக்கு மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

நாகபட்டினம் மாவட்டம், தலைஞாயிறு அருகேயுள்ள வெல்லப்பள்ளம் கிராம மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் சென்றனர். கோடியக்கரைக்கு தென்கிழக்கே சுமார் 20 கடல் மைல் தொலைவில் இரவு 10 மணிக்கு மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது அவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கினர். அதில் செல்லப்பன் என்ற மீனவர் பலியானார்.

இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் கருணாநிதி கடிதம் எழுதியிருந்தார். கண்டனம் தெரிவித்து அறிக்கையும் வெளியிட்டிருந்தார்.

அதில் தமிழக மீனவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் இக் கொடுமைகளைக் களைய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அதைத்தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம், முதல்வர் கருணாநிதிக்கு நேற்று முன்தினம் பதில்கடிதம் அனுப்பியுள்ளார். அதில், தாங்கள் எழுதியுள்ள கடிதம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன்ஆகியோரிடம் எடுத்துரைத்து, விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சகம் இலங்கை அரசுடன் பேசி இப் பிரச்சினை குறித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்றார். (6)

விதி விதி என்று எல்லாவற்றுக்கும் விதியின்மேல் பழிபோடாதீர்கள் மதியைப் பயன்படுத்துங்கள் – சுவாமி இராமதாசர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# விபத்துக்களின் அதிகரிப்பு காரண காரியங்கள் என்ன?

யாழ்.குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக வீதி விபத்துக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இதனால் உயிரிழப்பு, அங்கவீனம், காயமடைதல் என்ற துன்பம் நீள்கிறது.

ஏ – 9 பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தை நோக்கிய தென்பகுதி மக்களின் படையெடுப்பு யாழ்ப்பாண நகரை கொழும்பு மாநகரின் சனத்தொகைக்கு ஈடாக்கியது.

ஒடுங்கியதும் செப்பனிடப்படாததுமான வீதிகள், சனநெரிசலில் சிக்கித் தவிக்கின்றது.

கூடவே வாகனங்கள் எஞ்சியவற்றையும் ஆக்கிரமித்துக்கொள்ள விபத்துக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இருந்தும் யாழ்.நகரப் பகுதிகளில் பொலிசார் தீவிரமாகச் செயற்பட்டு வருவதால் யாழ்.நகர விபத்து கட்டுப்பாட்டில் இருப்பதை உணர முடிகிறது.

எனினும் யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை விபத்துக்கள் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உச்சமென்றே கூறவேண்டும்.

இரவு வேளைப் பயணங்கள், சாரதிகளின் பொறுப்பற்ற தன்மைகள், வீதி விதிமுறைகளை கடைப்பிடிக்காமை தெருக்களில் போதிய சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படாமை போன்ற இன்னோரன்ன விடயங்கள் வீதி விபத்துக்களை ஊக்குவிப்பதாக அமைகின்றன.

எதுவாயினும் வீதி விபத்துக்களை விசாரணை செய்வது மட்டும் போதுமானதல்ல.

மாறாக வீதி விபத்துக்கள் ஏற்படாதவாறான ஏற்பாடுகளை செய்வதில் கவனம் செலுத்துவது கட்டாயமானதாகும். இது விடயத்தில் இறுக்கமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இதில் குறிப்பாக வாகனங்களை வேகமாகச் செலுத்துதல், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துதல் பயணிகளை ஏற்றுவதற்காக தனியார் மினிபஸ்களும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளும் போட்டி போடுதல் – ஒருவரை ஒருவர் முந்திச் செல்வதற்காக முட்டுப்படுதல் போன்றவற்றை முற்றாக நிறுத்துவதற்கு பொலிசாரால் விசேட நடைமுறைகள் எடுக்கப்பட வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் கட்டுக்கடங்காமல் விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

# தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டால் சிங்களவருக்கு பதிலடி கிடைக்கும்

## நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான்

தமிழகத்தில் சிங்களவர் எத்தனைபேர் இருக்கிறார்கள்? என்று நாம் தமிழர் கட்சி கணக்கெடுத்து வைத்திருக்கிறது. இனி ஒரு முறை தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டால் இங்குள்ள சிங்களவர்களை உயிருடன் விடமாட்டோம் .

அவர்கள் யாரும் உயிருடன் இலங்கை திரும்ப முடியாது என்று நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் நேற்று ஆவேசமாகத் தெரிவித்தார். இலங்கை மீதான ஐ.நா.சபையின் போர்க்குற்ற விசாரணை குழுவை எதிர்க்கும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளை கண்டித்தும் இலங்கை கடற்படை யினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப் படுகின்றமையைக் கண்டித்தும் சென்னை கலெக்டர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு முழங்கினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா குழு இலங்கையில் நடந்த போர்க்குற்றத்தை நிரூபிக்கும். அப்படி நிரூபித்துவிட்டால் தமிழ் ஈழம் தானே அமைந்துவிடும். அதனால் தமிழக தலைவர்களுக்கு நாம் தமிழர் சார்பில் ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். உதவி செய்யவில்லை என்றாலும் பரவாயில்லை உபத்திரவம் செய்யாதீர்கள். உதவி செய்கிறேன் என்று ஏதேனும் பேசி காரியத்தை கெடுத்து விடாதீர்கள். இதுவரை 500 மீனவர்கள் சிங்களவர்களால் பலியாகியுள்ளனர்.

ஆனால் இப்போது ஒருவர் பலியானதற்கு மட்டும் கலைஞர் அக்கறை செலுத்துகின்றமை ஏன்? பிரதமருக்கு கடிதம் எழுதுகின்றமை ஏன்? இறந்த நபரின் குடும்பத்திற்கு மட்டும் 3 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை அறிவிக்கின்றமை ஏன்? எல்லாம் தேர்தல் நெருங்கிவிட்டது என்பதற்காகத்தான் என்றார். (ந-5)

## சுற்றாடலை மாசுபடுத்தும் விதத்தில் புகையினை வெளியிடும் வாகன உரிமையாளர் மீது நடவடிக்கை

சுற்றாடலை மாசுபடுத்தும் வகையில் தகுந்த செயற்பாட்டினை கொண்டிராது புகையினை வெளியிடும் நூற்றுக்கும் அதிகமான வாகனங்களின் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் பொலிஸாரினால் சோதனையின் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டியை அண்மித்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகளின் போது இந்த வாகனங்கள் அடையாளங் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களில் கண்டி நகர் ஊடாக போக்குவரத்தில் ஈடுபட்ட 320 க்கும் அதிகமான வாகனங்கள் பொலிஸார் பரி சோதனைகளுக்கு உட்படுத்தியபோது இப்பிரச்சினை கண்டுபிடிக்கப்பட்டது.

14 நாட்களுக்குள் தமது மோட்டார் வாகனத்திலிருந்து வெளியேறும் புகை தொடர்பான பரிசோதனை அறிக்கையைப் பெற்று அதனைச் சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் வாகன உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (6)

## வேவிலந்தையாளே இங்கிதமாய் கொடியேற்று!

அல்வையம் பதியருள் அன்னையவளே
ஆதி சக்தி பரமேஸ்வரித் தாயவளே
தொல்வினை எமை சேராமே
வல்வினை போக்கிட கொடியேற்றிடம்மா...
மங்கையவள் பாதி பரமனுக்கே நீ கொடுத்து
மாங்கல்யம் காத்திட அருள் சொரிந்திடுவாய்
இலந்தை மரமடியில் ஆலயம் கொண்டவளே
வேலிலந்தையாளே இங்கிதமாய்
கொடியேற்றிடம்மா...

அல்வையூர் யோகி.


## முத்துமாரி; கொடியேற்றுகிறாள்!

### இன்று அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கொடியேற்றம்

வானத்தின் உச்சியில்
மணியோசை ஒலிக்க ; புது
வாழ்வினை விடியலின்
துணையோடு சமைக்க ;
சோதனை வேதனை
அடியோடு அறுக்க ; –பூஞ்
சோலையாய் வாழ்விங்கு
வசந்தமாய் தழைக்க ;
நந்தவனம் வேவிலந்தை
பதிவாழும் நாயகி
கொடியேற்றுகிறாள்!

இ.கோபிகா
(யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

# எனக்கு அடுத்திருப்பவர் யார்?



இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொருவனும் அன்பைப் பெறவும் நட்பைச் சம்பாதித்துக்கொள்ளவும் விரும்புகின்றான். காரணம் அன்பைப்பெற்றால் மகிழ்ச்சியாக வாழலாம். நட்பைச் சம்பாதித்தால் பயமின்றி வாழலாம். எனவே அன்பும்,நட்பும் நண்பர்கள் வாழ்வின் பொக்கிஷங்கள். இதையே நம் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளும் தெளிவுபடுத்துகின்றன.

தன் நண்பனுக்காக உயிரைக்கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை மேலும் அறிமுகமான நண்பர்களுக்கு மட்டும் நம் உதவிக்கரங்களையும் அன்பையும் செலுத்துவதோடு கூட அறிமுகம் இல்லாத அயலாருக்கும் செலுத்த வேண்டும். இது தான் இன்றைய நற்செய்தியின் சாரம்.

## பரமபிதா காட்டிய பாதை

இன்றைய நற்செய்தியில் சட்டத்தில் நிறைவைக் காணாத திருச்சட்ட அறிஞர் இயேசுவிடம் வந்து தான் நல்லவர் எனக் காட்டிக்கொள்ள, எனக்கு அடுத்திருப்பவர் யார்? என்று ஒரு கேள்வியை முன் வைக்கிறார். இயேசுவும் அந்த மறை நூல் அறிஞனின் அறியாமையைப் போக்கி அவனுக்கு அடுத் திருப்பவர் யார் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

முதலில் பயணி –இவன் தொலைதூரத்திற்குச்செல்லும் ஒரு பயணி; அதுவும் யூதன்.அவன் கள்வன் கையில் அகப்பட்டு உயிருக்குப்போராடிக்கொண்டிருப்பவன். இவன் ஆபத்தில் உள்ளவன். ஆனால் இன்றைய உவமையில் அடிபட்டு போராடிக்கொண்டிருக்கிற பயணிகள் சுரண்டல் காரர்கள். முதலாளிகளால் நசுக்கப்பட்டு அடிமைப்படுத் தப்பட்டவர்கள் .

இரண்டாவது குரு – இவர் கடவுளுக்கு அர்ச்சனை செய்ய அபிஷேகம் செய்யப்பட்டவர். ஆனால் இவரின் கண்களுக்கு அடிபட்ட மனிதனும் தெரியமாட்டான். அழுகின்ற மனிதனும் தெரியமாட்டான். இன்றைய குருக்கள் தலைவர்களின் அடையாளமாய் இருக்கின்றான். இவர்கள் மூளை தான் விரிந்து கிடக்கும் ; இதயமோ சுருங்கி இருக்கும்.

மூன்றாவது– லேவியன்–இவனும் குருவுக்கு தொண்டு செய்கிறவன். குரு எவ்வழியோ அவ்வழியே சீடனும் என்று வாழ்ந்தவன் அடிபட்ட மனிதனை தன் குரு கண்டும் காணாமல் ஒதுங்கிச் சென்றது போல தானும் ஒதுங்கிச் சென்றவன். இவன் குருட்டுச் சீடன். இவன் இன்றைய நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவன். தனக்கு மேல் இருப்பவர்களைப் பார்த்து அச்சமும்,தனக்குக் கீழ் இருப்பவர்களைக் கண்டு அலட்சியமும் காண்பவன்.

நான்காவது சமாரியன்– இவன் ஒரு சமாரிய சகவழிப் போக்கன்–சமுதாயத்து தீட்டுப்பட்டவன் என்று யூத மதச்சட்டத்தால் ஒதுக்கப்பட்டவன். ஆனால் இவன் தான் அந்த அடிபட்ட யூதனுக்கு விரைந்து உதவுகின்றான். இவனிடம் ஆணவம் இல்லை ; ஆனால் அன்பு இருந்தது. இப்படிப்பட்டவர்கள் இன்று சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள். ஆனால் கடவுளின் பார்வையில் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்; பேறுபெற்றவர்கள்.

ஆம், மனித கண்களுக்கு அழுக்காகத் தெரிபவர்களும், முட்டாளாகத் தெரிபவர்களும் தான் இன்று ஆண்டவன் கண்களுக்கு அழகாகவும் அறிவாளிகளாகவும் தெரிபவர்கள். இவர்கள் தான் நமக்கு அடுத்து இருப்பவர்கள் . இவர்களுக்கு தொண்டு செய்யத்தான் நாம் அனுப்பப்பட்டிருக்கின்றோம். இவர்களை இனம் கண்டு இவர்கள் வாழ வழி செய்வோம்.

ஜோன் ஹரபோர்ட்

# இந்தியா-ஈரானுக்கிடையில் 6 முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(புதுடில்லி)

இந்தியா– ஈரான் இடையே பொருளாதார ரீதியான 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத் தானது.

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள ஈரான் நிதியமைச்சர் சஜித் ஷான் சுதின் டில்லியில் எஸ்.எம். கிருஷ்ணாவை சந்தித்து இரு நாட்டு உறவுகளை மேம்படுத் துவது குறித்து ஆலோசனை மேற் கொண் டுள்ளார்.

இதில் வர்த்தகத்தை மேம்படுத்துதல் , விமானசேவையை விரிவுபடுத்துதல் , அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இரு நாடுகளின் பங்குகள் உள்ளிட்ட 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியது.

ஈரான் அமைச்சருடனான சந்திப்பால் இரு நாடுகளுக்குகிடையே உள்ள உறவு மேலும் பலப்படும் என்று கிருஷ்ணா தெரிவித்தார்.

பொருளாதாரம் சார்ந்த முக்கிய திட்டங் கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் , இதில் இருநாடு களும் இணைந்து செயலாற்றும் என் றும் ஈரான்நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். (6)

# சுனிதா வில்லியம்ஸ் மீண்டும் விண்வெளிக்கு பயணம்

(வோஷிங்டன்)

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லி யம்ஸ் 2012 ஆம் ஆண்டு ஜுன் மாதம் தனது 2 ஆவது விண்வெளி பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த அறிவிப்பை நாசா விண்வெளி ஆய்வு மையம் நேற்று அதிகார பூர்வமாக வெளியிட்டுள்ளது.

இவர் இதற்கு முன் 2006 ஆம் ஆண்டு 29 மணிநேரம் 17 நிமிடங்கள் விண்வெ ளியில் பயணம் செய்து உலக சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்வெளியில் 4 முறை நடைபயணம் மேற்கொண்ட பெண்மணி என்ற பெருமை யும் இவரையே சாரும். (6)




# லஷ்கர்-இ-தொய்பா அமைப்பால் அமெரிக்காவுக்கும் ஆபத்து

## அந்நாட்டு புலனாய்வு அமைப்பு தெரிவிப்பு

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் இயங்கி வரும் லஷ்கர் –இ- தொய்பா , இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் அமெரிக்காவுக்கும் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று அமெரிக்காவிலிருந்து வெளி யாகியுள்ள அறிக்கை ஒன்று தெரிவித் துள்ளது.

வோஷிங்டன் நகரில் இயங்கி வரும் பயங் கரவாதம் குறித்த புலனாய்வு செயல்முறைத் திட்டம் (ஐ.பி.டி) என்ற அமைப்பு வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதா வது,

பல்வேறு வழிகளில் பெரிய அளவில் பயங்கரவாதத்தில் ஈடுபட்டு வரும் லஷ்கர் அமைப்பு உலகளாவிய பயங்கரவாத அமைப்புகளுடன் இணைந்து செயலாற்று கிறது. . அதன் நடவடிக்கைகளை பாகிஸ்தான் அதிகாரிகள் தடுப்பதில்லை. அதன் குறிக் கோள் இப்போது வேறு விதமாக உள்ளது.

குறிப்பாக மேற்கு நாட்டவர்களைப் பயங் கரவாதத்தில் ஈடுபடுத்த முயற்சிக்கிறது. லஷ் கர் போன்ற பயங்கரவாத இயக்கங்களில் சேரும் மேற்கு நாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது அச்சுறுத்தலை அதிகப்படுத்து கிறது.

பாகிஸ்தான் இராணுவத்தின் ஆதரவுடன் லஷ்கர் காஷ்மீருக்குள் ஊடுருவியுள்ளது. அதன் இன்றைய முக்கிய குறிக்கோள், காஷ் மீரின் விடுதலை பாகிஸ்தானில் லஷ்கருடன் தொடர்புடைய ஜமாத்-உத்-தவா தடை செய் யப்பட்டாலும் பலா-இ-இன்சனியாத் என்ற அமைப்பின் பேரில் அது தொடர்ந்து இயங்கி வருகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# பெனாசீர் படுகொலைச் சம்பவத்தை மறுவிசாரணை செய்ய முடியாது

## பாகிஸ்தானின் கோரிக்கையை ஐ.நா ஏற்க மறுப்பு

(நியூயோர்க்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனா சீர் பூட்டோவின் படுகொலை சம்பவம் குறித்து மறுவிசாரணை செய்ய முடியாது என்று ஐ.நா. திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

பெனாசீர் படுகொலை சம்பவத்தை விசா ரித்த ஐ.நா. ஆணைக்குழு கடந்த ஏப்ரலில் அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. அதில் முஷாரப் அரசும் பாகிஸ்தான் பாதுகாப்பு முக வர்களும் அலட்சியமாக நடந்து கொண்ட தால் தான் பெனாசீர் கொலை செய்யப்பட் டார் என்று சுட்டிக்காட்டியிருந்தது.

ஆனால் பாதுகாப்பு முகவர்களின் அலட் சியப்போக்கால்தான் பெனாசீர் கொல் லப்பட்டார் என்ற ஐ.நா. ஆணைக்குழு குற் றச்சாட்டுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச் சர் ஷா முகமது குரேஷி மறுப்பு தெரிவித்தார்.

பெனாசீர் கொலை சம்பவத்தை மறுவிசார ணை செய்ய வலியுறுத்தி ஐ.நா பொதுச் செய லாளர் பான் கீ மூனுக்கு கடிதமும் எழுதினார்.

இந்நிலையில் குரோஷியின் கடிதத்துக்கு ஐ.நா. பதில் அளித்துள்ளது.

அதில் பெனாசீர் பூட்டோ கொலை சம் பவம் குறித்து மறுவிசாரணை செய்ய இய லாது. அது முடிந்து போன செயல் என்று ஐ.நா. கூறியுள்ளது. (6)

# பாகிஸ்தானில் தற்கொலைக் குண்டு தாக்குதலில் 19 பேர் பலி;

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் நடத் தப்பட்ட தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் 19 பேர் கொல்லப்பட்டனர். 80 பேர் காயமடைந்தனர்.

வடமேற்கு பகுதியில் உள்ள யாககுந்த் என்ற கிராமத்தில் உள்ள முக்கியமான அரச அலுவலகத்துக்கு அருகில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

சக்தி வாய்ந்த குண்டுகளை மடியில் கட் டிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த தீவி ரவாதி அரச அலுவலகம் முன்பகுதியில் மோதி வெடித்துச் சிதறினார்.

இதில் அந்த இடத்தில் நின்று கொண் டிருந்த மக்களின் 15 பேர் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துள்ளதுடன் ; 4 பேர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க் கப்பட்ட சிறிது நேரத்தில் இறந்தனர்.

தாக்குதல் நடந்த இடத்துக்கு அருகில் முக்கியமான சந்தையும் அரச அலுவல கங்களும் உள்ளன. இத்தாக்குதலில் கடை கள் சில இடிந்து விழுந்ததாகவும் இடிபாடு களுக்குள் சிலர் சிக்கியிருப்பதாகவும் அதி கார பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு பெண்ணும் , குழந்தையும் இடி பாடுகளுக்குள் சிக்கியிருப்பதாகவும் அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெஷாவரில் உள்ள அரச மருத்துவம னையில் மட்டும் காயமடைந்த நிலையில் 54 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இதில் 10 பேரின் நிலைமை கவலைக் கிடமாகவுள் ளதாக மருத்துவமனை கண்காணிப்பாளர் ரஹீம் அப்ரிதி தெரிவித்தார்.

இந்த தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# பறந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து குதிக்க முயன்ற பெண் கைது

## கனடாவில் பரபரப்பு சம்பவம்

விமானத்தின் கதவைத் திறந்து குதிக்க முயன்ற பெண் ஒருவரை விமான ஊழியர் களும் , பயணிகளும் தடுத்து நிறுத்திய சம்ப வம் ஒன்று நடுவானில் நிகழ்ந்தது. கனடா வில் உள்ள கால்காரி நகரில் இருந்து ஹாலிபாஸ் என்ற இடத்துக்குச் சென்ற தனி யார் விமானம் ஒன்றிலிருந்தே மேற்படி பெண் குதிக்க முயன்றார்.

விமானத்தில் 131 பேர் பயணம் செய்த னர். விமானம் நடுவானில் பறந்து சென்று கொண்டிருந்தபோது கனடாவைச் சேர்ந்த ஒரு பெண் பயணி திடீரென எழுந்தார். விமா னத்தின் கதவைத் திறந்து குதிக்க முயன்றார். இதை விமான ஊழியர்களும் , பயணிகளும் பார்த்து விட்டனர். உடனே பாய்ந்து சென்ற அவர்கள் விமானத்தின் கதவைத் திறக்க விடா மல் அப்பெண்ணைத் தடுத்து நிறுத்தினர்.

இதனால் விமானத்தில் பரபரப்பு ஏற்பட் டது. உடனே விமானம் வின்னிபெக் என்ற இடத்தில் அவசரமாக தரை இறக்கப்பட்டது. அப்பெண் கனடா பொலிஸாரால் கைது செய் யப்பட்டார்.

விமானத்தின் கதவை ஏன் திறக்க முயன்றார் என்பது தெரியவில்லை. அவரி டம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# அமெரிக்க ஜனாதிபதியானதால் இழந்த சந்தோஷங்கள்

## பராக் ஒபாமா தெரிவிப்பு

பொது இடத்தில் நடைபயிற்சி மேற் கொள்வது குழந்தைகளை வெளியே அழைத் துச் செல்வது போன்ற சிறுசிறு சந்தோஷங் களை இழந்து விட்டேன் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.

பொதுவாக உயர் பதவிகளில் இருப்பவர் கள் சராசரி மனிதர்கள் அனுபவிக்கும் பல சிறிய சந்தோஷங்களை இழக்க வேண் டியது வரும். அவர்களால் பொது இடங்க ளுக்கு தனியாகச் சென்று வர முடியாது. பாது காப்பு அதிகாரிகள் இல்லாமல் ஊரைச் சுற் றிப் பார்க்க முடியாது.


இதனை ஒபாமா வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தொலைக் காட் சிக்கு அவர் வியாழக்கிழமை பேட்டியளித்தார். அப்போது ஜனாதிபதியானதால் எதையாவது இழந்ததாக எண்ணுகிறீர்களா? என்று கேட் கப்பட்டது.

இதற்கு ஒபாமா பதிலளிக்கலையில்,

அமெரிக்கா ஜனாதிபதியாகும் முன் எனக்கு கிடைந்த சில மகிழ்ச்சியான தரு ணங்களை இப்போது நான் நினைத்தாலும் மீண்டும் அனுபவிக்க முடியவில்லை. குழந் தைகளை வெளியே அழைத்துச் செல்வது, குதூகலிக்க,பூங்காவில் அமர்ந்து தனிமை யில் இயற்கை அழகை ரசிப்பது போன்றவை சராசரி மனிதர்களுக்கு மகிழ்ச்சி தரும் தரு ணங்களாகும்.

அவற்றை அனுபவித்த நாட்களை எண்ணி திருப்தியடைந்து கொள்ள வேண் டியுள்ளது தற்போதைய நிலையாய் உள்ளது என்று கூறினார். (6)

# ஆழ்கடலில் புதிய உயிரினங்கள்; விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



ஆழ்கடலில் வசிக்கும் உயிரினங்கள் பற்றிய புதிய ஆராய்ச்சியில் இதுவரை தெரியாத 10 உயிரினங்களை விஞ்ஞானி கள் கண்டுபிடித்துள்ளனர்.

அதிநவீன ஆழ்கடல் நீச்சல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அத்திலாந்திக் கட லில் இதுவரை செல்லாத ஆழத்துக்கு சென் றனர். 800 மீற்றர் முதல் 2500 மீற்றர் ஆழத்தில் வசிக்கும் புதிய உயிரினங்களில் சிலவற்றை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

# தென்னாபிரிக்காவில் கோலாகலம்

# உலக கால்பந்துக் கிண்ணம் யாருக்கு?

# நெதர்லாந்து, ஸ்பெயின் இன்று மோதல்

(சாக்கர்சிட்டி)

உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர் தற்போது விறுவிறுப்பான கட்டத்துக்கு வந்து விட்டது. ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர் பார்க்க இறுதிப் போட்டி இன்று ஜோகனஸ் பேர்க் சாக்கர்சிட்டி மைதானத்தில் நடைபெறு கிறது.

உலகக்கிண்ணத்தை கைப்பற்றுவதற்கான இந்த ஆட்டத்தில் ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த ஸ்பெயின், நெதர்லாந்து அணிகள் மோதுகின்றன.



இரு அணிகளுமே சம பலம் பொருந்தியது என்பதால் இறுதிப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும்என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு அணிகளும் முன்னணி நாடுகளை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றும் இறுதி ஆட்டத்துக்கு நுழைந்துள்ளன.

ஐரோப்பிய சம்பியனான ஸ்பெயின் அணி முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. நெதர்லாந்து அணி மூன்றாவது முறையாக தகுதி பெற்றுள்ளது.

1974ஆம் ஆண்டு இறுதிப் போட்டியில் ஜேர்மனி அணியிடமும் 1978ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனா அணியிடமும் தோல்வியடைந்து கிண்ணத்தை இழந்தது.


இரு அணிகளுமே முதல் முறையாக உலகக்கிண்ணத்தை வெல்லும் ஆர்வத்தில் உள்ளன. ஸ்பெயின் நெதர்லாந்து அணிகளில் உலகின் தலை சிறந்த வீரர்கள் உள்ளனர். தங்கப் பாதணியை பெறுவதில் ஸ்பெயின் அணியின் டேவிட் வில்லாவும் நெதர்லாந்து அணியின் வெஸ்லி ஸ்நைடரும் முனைப்புடன் உள்ளனர். இருவரும் தலா 5 கோல்கள் அடித்து முன்னிலையில் உள்ளனர்.

ஐரோப்பா கிண்ணத்தை இரண்டு முறை கைப்பற்றிய (1964, 2001) ஸ்பெயின் அணியின் ஷவி ஹெர்னான்டஸ் டொரஸ், பெட்ரோ,


நெதர்லாந்து

இனேஸ்டா, ஷபி அலோன்சா, செர்ஜியோ ரமோஸ் போன்ற உலகின் சிறந்த வீரர்கள் உள்ளனர்.

அணித்தலைவரும் கோல்காப்பாளருமான இகேர் கேசிலாஸ் ஸ்பெயின் அணியின் முதுகெலும்பாக உள்ளார். அவர் உலகின் தலைசிறந்த கோல் காப்பாளருமாவார். ஜேர்மனி அணிக்கெதிராக அரையிறுதியில் கோல் வாய்ப்பை இரண்டு முறை தடுத்தார்.


சாக்கர்சிட்டி

1988ஆம் ஆண்டு ஐரோப்பிய கோப்பையை வென்ற நெதர்லாந்து அணி இத் தொடரில் தோல்வி எதனையும் சந்திக்காமல் இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளது.

அந்த அணியில் ரோபன், டிர்க்கியூட், ரொபின் வான்பெர்சி, அணித்தலைவர் ஜிலோனி வானபிரோன் ஹோஸ்ட், மார்க் பொம்மல் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர்.

32 ஆண்டுகளுக்குப் பின்னர் இறுதிப் போட்டியில் நுழைந்துள்ள நெதர்லாந்து அணி இம் முறை கிண்ணத்தை நழுவ விட்டு விடக் கூடாது என்ற நோக்கில் உள்ளது.

ஸ்பெயின் அணி நடுக்களத்திலும் பின் களத்திலும் வலுவாகவுள்ளது. நெதர்லாந்து அணி முன்களத்திலும், நடுக்களத்திலும் பலமாகவுள்ளது. இரு அணிகளும் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை நேரப்படி இன்று நள்ளிரவு 12 மணிக்கு இறுதிப் போட்டி ஆரம்பமாகிறது.

## உலகக்கிண்ண துளிகள்

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரில் இறுதி ஆட்டம் இன்று நடக்கிறது. சாக்கர் சிட்டியில் நடக்கவுள்ள ஆட்டத்தில் ஐரோப்பிய சம்பியன் ஸ்பெயின் மிட்பீல் மேஸ்ட்ரோஸ் நிறைந்த நெதர்லாந்து அணியை எதிர் கொள்கிறது. இதற்கு முன் உலகக் கிண்ணம் பற்றிய சில சுவாரசிய தகவல்கள்.

✸ ஸ்பெயின், நெதர்லாந்து இந்த இரண்டில் எந்த அணி வெற்றிபெற்றாலும் தங்கள் கண்டத்துக்கு வெளியே நடந்த உலகக் கிண்ணத்தில் சம்பியன்பட்டம் வென்ற இரண்டாவது அணி என்ற பெருமையைப்பெறும்.

இதற்கு முன் சுவீடனில் 1954ஆம் ஆண்டு போட்டியிலும் 1994ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த போட்டியிலும் பிரேசில் கிண்ணத்தை வென்றுள்ளது. தங்கள் கண்டத்துக்கு வெளியே கிண்ணத்தை வென்ற ஒரே அணி பிரேசில் மட்டுமே.

✸ கடந்த 1958ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் மேஜிகல் மாகயர்ஸ் என்று அழைக்கப்பட்ட ஹங்கேரி அணியினர் இந்த உலகக்கிண்ணத் தொடரில் நெதர்லாந்து அணிபோலவே ஒரு போட்டிக்கு 2.72 சராசரி கோல் அடித்திருந்தனர் ஆனால் இறுதிப் போட்டியில் ஜேர்மனியிடம் 3:2 என்ற கோல் கணக்கில் தோற்றது ஹங்கேரி.

✸ இத்தாலி, பிரேசில் மட்டுமே தொடர்ந்து இரு உலகக் கிண்ணப் போட்டியில் சம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளன. 1934, 1938ஆம் ஆண்டு இத்தாலியும், 1958 மற்றும் 1962 ஆம் ஆண்டுபிரேசில் அணியும்தொடர்ந்து உலகக்கிண்ணத்தை கைப்பற்றியுள்ள நாடுகள்.

✸ இருமுறை தொடர்ந்து உலகக்கிண்ண இறுதி ஆட்டத்தில் விளையாடிய கோப்பையை வெல்லாத அணிகள் பட்டியல் போட்டால் புட்போல் என்று அழைக்கப்படும் நெதர்லாந்து அணியே முதலிடத்தில் உள்ளது. 1974 மற்றும் 1978ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடர் இறுதி ஆட்டங்களில் நெதர்லாந்து தோல்வி கண்டுள்ளது.

அதேபோல் மேற்குஜேர்மனியும் 1982 மற்றும் 1986ஆம் ஆண்டுகளில் இறுதிப் போட்டிக்கு முன்னேறி இரு முறையும் கோப்பையை கோட்டைவிட்டது.

✸ ஒரே உலகக்கிண்ண போட்டியில் இரு முறை ஹட்ரிக் கோல் அடித்த முதல் வீரர் ஹங்கேரியின் சான்டர் கோசிக்ஸ். 1954ஆம் ஆண்டு கோசிக்ஸ் இந்த சாதனையை செய்தார். அதன் பின்னர் 1958ஆம் ஆண்டு பிரான்சின் ஜஸ்ட் பான்டையும் 1970ஆம் ஆண்டு ஜேர்மனியின் ஜெர்டு முல்லரும் இந்த அரிய சாதனையை செய்தனர்.

✸ 1990ஆம் ஆண்டு இத்தாலியில் நடந்த உலக்கிண்ண தொடரில் தான் மிக குறைவாக ஒரு போட்டிக்கு 2.21 என்ற சராசரி கோல் அடிக்கப்பட்டது.

✸ இந்த உலகக்கிண்ண போட்டியில் நெதர்லாந்து தோல்வி கண்டால் இறுதிப் போட்டிக்கு 3 முறை தகுதி பெற்றும் கிண்ணத்தை வெல்லாத நாடு என்ற பட்டம் கிடைக்கும். இதற்கு முன் யூகோஸ்லோவாக்கியா, ஹங்கேரி அணிகளும் இரு முறை உலகக்கிண்ண இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்ற 12ஆவது அணி என்ற பெருமையை ஸ்பெயின் பெற்றுள்ளது. உலக கிண்ணத்தை வென்றால், உலகக் கிண்ண இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்த முதல் போட்டியிலேயே கிண்ணம் வென்ற 6 ஆவது நாடு நாடு என்ற பெருமையும் அதற்குக்கிடைக்கும். இதற்கு முன் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, இங்கிலாந்து, உருகுவே அணிகள் முதல் இறுதி ஆட்டத்திலேயே உலகக்கிண்ணத்தை கைப்பற்றியுள்ளன.

✸ இறுதி ஆட்டத்தில் ஐரோப்பிய அணிகள் மட்டுமே மோதுவது இது 8ஆவது முறை ஆகும். ஐரோப்பா கண்டத்துக்கு வெளியே இது நடப்பது முதல் முறையாகும். உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் தென்னமெரிக்க அணிகள் இரு முறை மோதியுள்ளன. அந்த இரு முறையும் உருகுவே சம்பியன் பட்டம் பெற்றது.

## ஸ்பெயின் சம்பியன் ஒக்டோபஸ் ஆரூடம்


(ஜேர்மனி)

உலகக்கிண்ணத்தை ஸ்பெயின் அணி கைப்பற்றும் என் ஒக்டோபஸ் அதிரடியாக கணித்துள்ளது. ஜேர்மனியின் ஓபர்ஹாசினில் கடல் வாழ் உயிரினங்களின் கண்காட்சியகம் உள்ளது.

இங்குள்ள கால் என்ற ஒக்டோபர்ஸ் தென்னாபிரிக்காவில் நடக்கும் உலகக்கிண்ண கால்பந்துத் தொடரில் ஜேர் மனியின் வெற்றி தோல்விகளை சரியாக கணித்து வந்தது.

அரையிறுதியில் ஸ்பெயினிடம் ஜேர்மனி தோல்வியடையும் என சுட்டிக்காட்டியது. இதன்படியே ஜேர்மனி தோற்றது.

இதுவரை ஆறு போட்டிகளுக்கான முடிவை முன் கூட்டியே தெரிவித்த ஒக்டோபஸின் கணிப்பு 100 சதவீதம் உண்மையாகியுள்ளது.

இதனால் இன்று நடக்கவுள்ள போட்டியில் எந்த அணிக்கு ஒக்டோபர்ஸ் ஆதரவு தெரி விக்கும் என ரசிகர்களிடேயே பெரும் எதிர் பார்ப்பு நிலவியது.

### ஸ்பெயின் சம்பியன்

இதனையடுத்து நேற்று முன்தினம் இறுதிப் போட்டியில் விளையாடவுள்ள ஸ்பெயின் மற்றும் தெர்லாந்து நாட்டுக்கொடிகள் அடங்கிய கண்ணாடிப் பெட்டிகள்வைக்கப்பட்டன.

இதில் ஸ்பெயின் கொடி வரையப்பட்ட பெட்டியிலுள்ள சிப்பி எடுத்தது ஒக்டோபஸ்.

### கிளி என்ன சொல்லுது?

ஒக்டோபஸை போல சிங்கப் பூரில் உள்ள மணி என்ற கிளியும் உலகக்கிண்ணப் போட்டிகளின் முடிவை முன் கூட்டியே கணித்து வருகிறதாம் உலகக் கிண்ணத் தொடரின் நான்கு காலிறுதிப் போட்டி மற்றும் ஸ்பெயின், ஜேர்மனி அணிகள் மோதிய அரையிறுதிப் போட்டிகளில் முடிவை இந்தக் கிளி சரியாக கணித்துள்ளது.

இறுதிப் போட்டியில் நெதர்லாந்துக்கு வெற்றிக்கிடைக்கும் என இந்தக் கிளி கணித்துள்ளது.

## ஜ.நாவுடன் ஒத்துழைப்ப...

வெளியிட்டுள்ளது.

அதேவேளை அமைதியான போராட்டங்களில் ஈடுபடும் உரிமை ஜனநாயக முறைமையின் ஒரு அடிப்படை அங்கம் எனவும் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் பிராந்தியக் காரியாலயத்தை மூடுவதற்குச் செயலாளர் நாயகம் எடுத்துள்ள தீர்மானம் எதிர்பார்ப்புகளை முறியடிக்கும்வகையில் அமைவதாகவும் வெளிவிவகார அமைச்சுக் குறிப்பிட் டுள்ளது.

இந்தக் காரியாலயம் ஆசிய பசுபிக் வலயத்தைச் சேர்ந்த 34 நாடுகளுக்குச் சேவையாற்றும் ஒன்றாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும் இந்தக் காரியாலயத்தை மூடுவதற்கான தீர்மானம் கடந்த வருடமே மேற்கொள்ளப்பட்ட விடயம் என ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் கொழும்புக் காரியாலயத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வேறு சில நாடுகள் அறிக்கை விடுத்துள்ளன.

இந்தப் போராட்டங்கள் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயம் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாவதாக ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் ஒன்றிணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (ந-5)

## கல்லுண்...

வண்டி நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கர வண்டியிலிருந்த களபூமி காரைநகரைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் நாகம்மா (வயது-66) என்பவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். இறந்தவரின் மகனான பாலசுப்பிரமணியம் மனோகரன் (வயது-36) இவரின் மனைவி மனோகரன் சுபாஜினி (வயது-33), மகள் மனோகரன் மதுரா (வய்து-05) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-6,246)

## குடும்பநல பெண் உத்தியோகத்தர்...

விடுதியில் கடமையாற்றிய குடும்ப நல உத்தியோகத்தர் விடுமுறையில் சென்றமையால் பதில் கடமைக்காக தர்ஷிகா வேலணை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றினார்.

நேற்று முன்தினம் இரவுக் கடமையில் இவர் இருந்தபோது கையடக்கத் தொலைபேசியில் உரையாடியதை குற்றச்சாட்டாக வைத்து, பிரஸ்தாப வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் பிரியந்த செனவிரட்ண பல மணி நேரமாக சத்தமிட்டு அவரைத் திட்டியதாகக் கூறப்படுகின்றது.

இரவு 7 மணிக்குப் பிரஸ்தாப குடும்ப நலப் பெண் உத்தியோகத்தரை திட்டத் தொடங்கிய டாக்டர் செனவிரட்ண, சாமம் 12 மணி வரை பெரும் சத்தத்துடன் திட்டித் தீர்த்துள்ளதுடன் அவரின் கையடக்கத் தொலைபேசியையும் பறித்தெடுத்துள்ளார்.

டாக்டர் செனவிரட்ணவின் இனம்புரியாத கோபத்தால் பயந்து அழுத தர்ஷிகா, மயக்கமுற்றபோது சக ஊழியர்கள் அவருக்கு முதலுதவிச் சிகிச்சை அளித்தனர்.

மீண்டும் நேற்று அதிகாலை தனது கடமையைப் பிரஸ்தாப குடும்ப நல உத்தியோகத்தர் ஆரம்பித்தபோதும் மீண்டும் டாக்டர் செனவிரட்ண திட்டத் தொடங்கியுள்ளார்.

தனது கையடக்கத் தொலைபேசியைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு தர்ஷிகா கேட்ட போதும் அதனை வழங்குவதற்கு டாக்டர் மறுத்து விட்டார். நிலைமை இதுவாக இருக்க தனது சீருடையுடன் நேற்றைய கடமைக்காக கையொப்பம் இட்ட தர்ஷிகாவை சில மணி நேரம் காணவில்லை என வைத்தியசாலைப் பணியாளர்கள் தேடியதாகவும் பின்னர் அவரின் விடுதி யன்னலைத் திறந்து பார்த்தபோது மின்விசியில் தொடுக்கப்பட்ட கயிற்றில் சீருடையணிந்தவாறு அவர் சடலமாக தொங்குவதைக் கண்டதாகவும் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தையடுத்து ஊர்காவற்றுறை பதில் நீதவான், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேரில்சென்றுவிசாரணைகளைமேற்கொண்டனர்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் பிரஸ்தாப டாக்டர் பிரியந்த செனவிரட்ண வைத்தியசாலை கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரை தாக்கியதாகவும் இதனால் கட்டடப் பணி இடைநிறுத்தப்பட்டதாகவும் இதன்போது யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேரில் சென்று சமரசம் செய்து வைத்ததாகவும் கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க டாக்டர் செனவிரட்ண வேலணை வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளார். குடும்ப நல உத்தியோகத்தர் தர்ஷிகா கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்ற விபரம் பிரேத பரிசோதனையின் போது தெரிய வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி சம்பவத்தால் வேலணை வைத்தியசாலை பீதியில் உறைந்துள்ளது. (ந-7,22)

## ஒரு...

பல்கலைக்கழக துணைவேந்தரிடம் இம் மாணவர்கள் கையளிக்கப்பட்டனர்.

இதேவேளை யுத்தத்தால் பாதிக்கப்பட்டுச் சொத்துக்களையிழந்த பத்துப் பேருக்கு நஷ்டஈடும் வழங்கப்பட்டது. (ந-7)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு...

அவர் ஆற்றிய உரை வருமாறு, இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னர் பாரிய பொறுப்பை நான் செய்துள்ளேன். தமிழ்-சிங்கள மொழியை அரச கருமமொழியாகப் பிரகடனப்படுத்தியுள்ளேன்.

புதிய அத்தியாயத்தின்படி கட்டாயமாகச் சகல தமிழ் அதிகாரிகளும் சிங்களம் கற்க வேண்டும். சகல சிங்கள அதிகாரிகளும் தமிழ் கற்க வேண்டும்.

2007 ஆம் ஆண்டு பொலிஸ் திணைக்களத்தில் 600 பேர் மட்டுமே தமிழ் தெரிந்தவர்களாக இருந்தார்கள். இப்போது 600 பேரை 6 ஆயிரம் பேராக உயர்த்தியுள்ளேன்.

அதேபோன்று முப்படைகளைச் சேர்ந்தவர்களுக்கும் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ்-சிங்களம் ஆகியன கட்டாய மொழியாகப் பயன்பாட்டில் இருக்கும்.

எங்களுடைய முன்னைய தலைவர்கள் தனிமைப்படுத்தியிருந்த பிரச்சினையைத் தற்போது தீர்த்துள்ளோம். இதனூடாகத் தமிழ், சிங்கள மக்களிடையே தொடர்பையும் உறவையும் வலுப்படுத்திக் கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் இரண்டு இனங்களுக்கிடையில் பல்வேறு பிரச்சினைகள் மனக்கசப்பை ஏற்படுத்தியிருந்தன. இந்தக் கசப்பான விடயங்கள் பற்றிச் சிந்திக்காமல் எதிர்வரும் புதிய யுகத்திற்கான சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வரலாற்று ரீதியாக இன்று எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. யுத்தத்திற்குப் பின்பு தமிழ் மக்களுடன் சேர்ந்து பணியாற்றுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

இனப்பிரச்சினை என்பது எங்களுடைய நாட்டுக்கு மட்டுமல்ல உலகத்தில் 80ற்கும் அதிகமான நாட்டில் இன ரீதியாக, மொழி ரீதியாக, மத ரீதியாக, வர்த்தக ரீதியாகப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நாடு சுதந்திரம் அடைந்த பின்பு ஆட்சியிலிருந்தவர்களால் இந்தப் பிரச்சினனைத் தீர்ப்பதற்கு முடியாமல் போனதுடன், அடையாளமும் காண முடியாமல் போயுள்ளது.

ஆகவே இதில் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருந்த மக்களே. இது வட பகுதியை மட்டும் பாதிக்கவில்லை. நாட்டில் எல்லாப் பகுதியையும் பாதித்துள்ளது.

இந்த இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து முடிப்போம். இருந்தாலும் பிரதான அரசியல் கட்சிகள் மத்தியிலேயே ஒற்றுமை, ஒருமைப்பாடு இல்லாத காரணத்தினால் அவற்றைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் போயுள்ளது.

1987 ஆம் ஆண்டு 13-வது திருத்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்ட போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனத்திலிருந்து அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக குரல்கொடுத்து வாக்களித்த ஒருவன் என்பதில் பெருமையடைகின்றேன்.

தற்போதைய சூழ்நிலையில் சகல அரசியல் கட்சிகளும் ஒரேயிடத்திற்கு வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். பிரச்சினையைத் தீர்க்கின்றபோது எங்களுடைய அனுபவம் மட்டும் அல்லாமல் அயல் நாட்டினுடைய அனுபவங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக இந்தியாவின் ஒத்துழைப்பையும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பையும் உணர்வுகளையும் மதித்துத் தீர்வு காணப்படுவது அவசியம்.

இனப்பிரச்சினையை உணர்வுபூர்வமாக தீர்க்க முடியாது. அறிவுபூர்வமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அந்த முடிபுக்கே தற்போது நாங்கள் சென்றுள்ளோம்.

ஆகவே தமிழ் மக்களின் ஒத்துழைப்புத் தேவை. யுத்தம் முடிபடைந்த பின்னர் அகதி முகாம்களில் வாழ்ந்த மக்களை விடுதலை செய்யும்படி நாடாளுமன்றத்தில் வாதாடினார்கள்.

அதற்கு நாங்கள் மறுப்புத் தெரிவித்தோம். காரணம் கண்ணிவெடி புதைக்கப்பட்ட காரணத்தால் மக்கள் மீளக்குடியேற முடியாமல் போனது.

தற்போது முடிந்தவரை மக்களை மீள்குடியேற்றியுள்ளோம். இன்னும் 40 ஆயிரம் மக்களே எஞ்சியுள்ளனர். வரும் மூன்று மாதங்களுக்குள் அவர்களையும் மீள்குடியேற்றுவோம்.

மிக விரைவில் மாகாண சபை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை நடத்தவுள்ளோம். இதில் தமிழ் மக்கள் தங்களுடைய தலைவர்களைத் தெரிவு செய்து தமது அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்.

9 மாகாண சபையையும் சமமாக அபிவிருத்தி செய்வதுதான் எமது நோக்கம். கடந்த 30 ஆண்டில் கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட மேல் மாகாணம் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் மூன்று வீதம் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டது. இச் சிறிய நாட்டில் எங்களை நாங்கள் அழித்துக் கொள்ளக் கூடாது என்றும் அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்தார். (ந-5,7)


**ப்மிலி சுப்பர் ஸ்பொட்**

சந்தை அருகாமை, மானிப்பாய்

T.P.:- 021 5100169 / 021 7900388

**BAHIRA**

கோழி இறைச்சி :- 1Kg- 350/=
பன்றி இறைச்சி :- 1Kg- 490/=

பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ரூபாய் 350/= பெறுமதியான கைப்பை இலவசம்.

(C-545)



**விற்பனையாகின்றது**

18 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆங்கில மொழி மூல
ஆசிரியர் தெரிவு வழிகாட்டி- விலை-250/=
17 ஆம் திகதி மாகாண வெளிக்களப் போதனாசிரியருக்கான
பொது அறிவு, பொது உளச்சார்பு வழிகாட்டி:- விலை-300/=
தொகுப்பு-த.தவசேகர்

பிரபல புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும். இப் பரீட்சைகளுக்கான வழிகாட்டல் வகுப்பு இன்று (3.00-5.30) வார நாட்களில் 3.30 தொடக்கம் 5.30 வரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவில் நடைபெறும்.

(C-631)



**பதிவு செய்யவும்**

அன்னை புத்தகசாலையின் அனுசரணையில் நடைபெறும் கொழும்பு பிரபல வணிக ஆசிரியர் S.மயூரன் அவர்களின் கருத்தரங்கு இம் மாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் உயர் கல்வி நிறுவனத்தில் (ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளது.

அதற்கான பதிவுகளை 12.07.2010
காலை 8.30 மணிக்கு முன்பு மேற்கொள்ளவும்

2 நாட்களுக்கான கட்டணம் 800/= ரூபா மட்டுமே. காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை கருத்தரங்கு நடைபெறும்.


மேலதிக தொடர்புகளுக்கு:- 077 24876621

(C-628)


## மரண அறிவித்தல்

### மகேஸ்வரன் சுதாகர் (தீபன்)

(சிங்கர் கம்பனி ஊழியர்)



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் சுதாகர் நேற்று (10.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரன் அருள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா, செல்லம்மா, காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னம்மா ஆகியோரின் அன்புப் பேரனும்,

காலஞ்சென்ற தயாளன் மற்றும் கல்பனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நித்தியானந்தனின் (தம்பி தேனீர்ச்சாலை) அன்பு மைத்துனனும், சானுகாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.07.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது மைத்துனனின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மைத்துனன் அ.நித்தியானந்தன் (தம்பி)
தம்பி தேனீர்ச்சாலை
இல.18, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
077 6365813 / 077 3627761

இல.14, B.S. லேன்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-630)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.